
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# வெளிச்சம்

மாசி - 1993

20/=



கேணல் கிட்டு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

கிளிநொச்சி மக்களின்
நன்மதிப்புக்குரிய பலசரக்குப் பொருள் விற்பனை நிலையம்.

# கந்தன் களஞ்சியம்

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
தேவையான பலசரக்குப் பொருட்களை வாங்குவதற்கு

## கந்தன் களஞ்சியம்

எப்பொழுதும் தயாராக இருக்கின்றது.

## கந்தன் களஞ்சியத்தில்

*சகலவிதமான பலசரக்குப் பொருட்களையும்
பெற்றுக் கொள்ளுங்கள்.*

*நியாயமான விலை எப்பொருளுக்கும்.
நாணயமிக்க நிறுவனம் என்றும்,*

# கந்தன் களஞ்சியம்

*[மொத்த, சில்லறை பலசரக்குப் பொருள் விற்பனையாளர்]*
(கரடிப்போக்குச் சந்தி,)
யாழ்ப்பாண வீதி,
கிளிநொச்சி.

# நெஞ்சில் வாழும் நினைவுக்கு



பொது சன நூலகம்
மாநகராட்சி மன்ற
-2-3-1993
யாழ்ப்பாணம்

''அசோகச்சக்கரம்'' குருதியில் குளித்தது.
''வங்கமாகடல்'' தீயினில் கொதித்தது,
''இந்திய வல்லூறு''களின்;
கூரிய அலகுகள்;
''ஒலிவ்'' தளிர் சுமந்து வந்த;
வெள்ளைப் புறாக்களை,
எப்படிக் குதறலாம்?
''கிட்டுவும், குட்டிசிறியும்
எட்டு வேங்கைகளும்''
''வேடந்தாங்கல்'' தேடிவந்த,
வெளிநாட்டுப் பறவைகள் அல்ல..
தங்கள் கூடுதிரும்பிய குருவிகள்.
''கோட்சே'' கூட,
தன்னை நியாயப்படுத்தினான்.
சிலர் ஏற்றும் கொண்டனர்.
இந்திய அரசே!
முகமூடி இழந்துபோன;
உன் ஆதிக்க முகத்தையும்,
அகோரப் பற்களையும்;
எந்த முந்தானையால் மூடப்போகிறாய்?
ஆசியக் கடலுக்குள்;
அகலக்கால் பரப்ப;
உன்னை அனுமதித்தது யார்?
கேட்க யாருமே இல்லையா?
உலகம் எப்போது ஊமையானது?


# வெளிச்சம்

மாசி - 1993
இதழ் - 11

அமைதிப் படை என்ற பேரில் இங்கு வந்த இந்தியப்படை, ஸ்ரீலங்கா அரசபடைகள் செய்ததிலும் பார்க்க கூடுதலான அழிவுகளையும், அனர்த்தங்களையும் எம்மண்ணிலே ஏற்படுத்தியதை நாம் இன்றல்ல என்றும் மறக்கமாட்டோம். எம்மக்களின் கலை, பண்பாட்டு வாழ்வை இந்திய அரச படைகளே பெருமளவு அழித்தன. தமிழீழத்தின் விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையையும் இந்திய அரசு திட்டமிட்டு அழித்துவருகின்றது. பேச்சுவார்த்தை, அமைதி என்று உதட்டளவில் கூறிக்கொண்டு திலீபன், புலேந்திரன், குமரப்பா, ஜொனி ஆகியோரினதும், இன்னும் பல போராளிகளினதும், சாவுக்கு இந்திய அரசே காரணமாகியதென்பதை நாம் மட்டுமல்ல இந்த உலகமே உணர்ந்து கொண்டுள்ளது. தமிழ் மக்களை பெருமளவு அழித்த இந்திய அரசால், தமிழ் மக்களின் வேணவாக்களைத் தீர்க்கும் வகையில் ஒரு தீர்வுத் திட்டத்தை வைக்கவும் இதுவரை முடியவில்லை. முயலவுமில்லை. தம்மால் வைக்கப்பட்ட அரைகுறைத் தீர்வுத் திட்டத்தைக்கூட, இந்திய அரசால் செயற்படுத்த முடியவில்லை. இந்த நிலையில் உலக நாடுகளின் துணையுடன் தமிழீழ மக்களின் வேணவாக்களைத் தீர்க்க எடுக்கப்படும் முயற்சிகளைக்கூட இந்திய அரசு விரும்பவில்லை மட்டுமல்ல, அதை எப்பாடு பட்டாயினும் முறியடிக்க விரும்புகிறது. இந்த வகையில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கான தீர்வுத் திட்டமொன்றுடன் தமிழீழம் நோக்கி வந்த எங்கள் தளபதிகளில் ஒருவரான திரு. கிட்டு அவர்களை அனைத்துலக கடற்பரப்பில் வைத்து சட்டபூர்வமற்ற முறையிலே கைது செய்ய முற்பட்டதின் மூலம் இந்திய அரசானது அமைதித் திட்ட முயற்சிக்கு ஆப்பு வைக்க முயன்றுள்ளது. அத்துடன் எமது நீண்டகாலத் திட்டமான தமிழீழப் போராட்டத்தின் தலைமையை அழிக்கும் வேலையையும் செய்து முடித்துள்ளது. தமிழீழப் போராட்டத்திற்கு தொடர்ச்சியாக இந்திய அரசு செய்து வரும் துரோகத் தனத்தை நாம் கண்டிக்கிறோம்.

எம்மண்ணையும், மக்களையும், எமது கலை, பண்பாட்டு வாழ்வையும் பேணிக்காக்கும் வகையில் எம் போராட்டத்தை முன்னெடுத்த கேணல் கிட்டு அவர்களும், மற்றும் ஒன்பது தோழர்களும் இந்திய வல்லாதிக்கத் துரோகத் தனத்திற்கு அடிபணிய மறுத்து தங்கள் உயிர்களைத் தற்கொடையாக்கித்தந்து எம்மண்ணின் வீரத்தையும், பெருமையையும் உலகுக்கு உணர்த்தியுள்ளனர். இவர்களுக்கு வெளிச்சம் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

# வரலாற்றுப் பக்கங்களில்




தமிழீழ விடுதலைப் புலிகளின்
மூத்த தளபதியும், மத்திய குழு உறுப்பினருமான

# கேணல் கிட்டு

**(சதாசிவம் கிருஷ்ணகுமார்)**


**வல்வெட்டித்துறை.**

# அண்ணனுக்குத் தம்பியாய் அருகில்




"அண்ணனுக்குத் தம்பியாகி அருகில் நின்றவன் — களம் ஆடியெங்கள் தாயகத்தில் பகையை வென்றவன்"

## படை நடத்தும் தலைவனுக்குப் பக்கத்தில்




''பாசத்தோடு
ஈழமக்களின்
நெஞ்சை
ஆளுவாய் — பிர
பாகரனின்
தம்பியாகி
என்றும்
வாழுவாய்''


## இனி வருமோ இந்த வசந்தம்



## வாசல் வந்த எதிரிக்கும் வரவேற்பு



''தாயகத்துப் போர்க்களத்தில் நீமுழங்கினாய் — தம்பி
தானையிலே தளபதியாய் நீவிளங்கினாய்''




குறிதவறோம் என்ற குறியீடு

## மக்களின் நெஞ்சத்தில் மலராக...



''பொங்குகின்ற புலிகளுக்கு வழிகாட்டினாய் — இன்று
புயல்படுத்த மாதிரியாய் விழிமூடினாய்''



## கற்பிக்கும் ஆசானாக...

# படை நடத்தும் போது



"சிங்களத்துப் படைகளுடன் போராடினாய் — வந்த இந்தியர்களோடும் அன்று வாதாடினாய்"



காலிழந்தும் தலைவனுடன் களத்தில்...

"எமது தலைவரின் நேரடி வழிகாட்டலில் வளர்ந்த, வாழ்ந்த கிட்டண்ணா தனது போராளிகள் மீது காட்டிய அன்பும், பரிவும், கரிசனையும் ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல. மற்றவர்களின் தேவையை அறிந்து நடக்கின்ற பண்பும், அவர்களின் நலன் மீது கொண்ட அக்கறையும் துணிவும் போராட்டத்தின் மீதும், தலைவரின் மீதும் கொண்ட விசுவாசமும் சேர்ந்துதான் தமிழீழத்தின் ஒருபகுதியான யாழ் மாவட்டத்தை அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து மூன் னூறு வருடங்களுக்குப் பின்னர் மிகக்குறைந்தளவு போராளிகளுடன் புலிகளின் காட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்ததற்கான காரணியாகக் கூறலாம்."

# நினைவில் ஓர் நிகழ்வு

சி. பாவரசன்

1985ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 21ம் நாள்

எனது சகபோராளியான திபன் என் தூக்கத்தைக் கலைக்கிறான்.

"அண்ணை ...... அண்ணை அல்பேட் அண்ணை உங்களை எழுப்பிவிடட்டாம். எழும்புங்கோ அண்ணை."

"ஓமடாப்பா எழும்புறன் எண்டு சொல்லு......" மீண்டும் புரண்டு படுத்துக் கொள்கிறேன்.

இரண்டு நாட்களின் முன்னர் தான் அல்பேட்டின் அணி ஏழாலையில் அந்த வீட்டை தனது முகாமாக்கிக் கொண்டது. அன்று இரவு எல்லோருடனும் கலந்துரையாடும் பொழுது, 'காலையில் நாங்கள் எல்லோரும் உடற்பயிற்சி செய்வோம்' என்று அல்பேட் சொல்லியிருந்தார். அதற்காகத் தான் என்னை எழுப்பிவிடுமாறு கூறியுள்ளான் என எண்ணிக்கொண்டேன்.

அல்பேட் வேகமாகவும், உரமாகவும் என்னை உலுப்பினான். 'எழும்பு மச்சான். கிட்டண்ணை றவுண்டப்புக்குள்ளையாம்.' அல்பேட்டின் வேகமும் வார்த்தைகளும் என்னைத் துள்ளி எழ வைத்தது. போராளிகள் எல்லோரும் அவசரமாகத் தயாராகி விட்டார்கள். எல்லோரும் வானில் ஏறுங்கோ...... நீ போய் வானை எடு மச்சான், அல்பேட் கட்டளையிட்டான். எங்க

ளது 'வான்' சுதுமலையை நோக்கி வேகமாக ஓடத்தொடங்கியது. அல்பேட் 'வோக்கிடோக்கி'யில் கிட்டண்ணையுடன் தொடர்பெடுத்துக்கொண்டும், சண்டை நிலைமையை அறிந்து கொண்டும் என்னைக் 'கெதியாய் ஓடு மச்சான் ..... கெதியாய் ஓடு மச்சான்......' என்று வார்த்தைகளால் விரட்டிக்கொண்டிருந்தான். எமது வாகனத்தை உலங்குவானூர்தி ஒன்று, புறப்பட்ட இடத்திலிருந்து கலைத்துக் கலைத்து வேட்டுக்களைத் தீர்த்தவண்ணம் துரத்திக் கொண்டேயிருந்தது. ஒருவேளை உலங்கு வானூர்தியைச் செலுத்தியவன் தான் நன்றாகத் துரத்துகிறேன் எனறு எண்ணியிருக்கலாம். ஆனால், உண்மையில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட இராணுவத்தினரைத் திணறவைத்துக் கொண்டிருந்த கிட்டண்ணைக்கு உதவவே அல்பேட் தனது அணியுடன் சுதுமலையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான். இணுவிலுக்கூடாகச் சென்ற அல்பேட்டின் அணியினரும், இராணுவத்தினரைச் சந்தித்துக்கொண்டு அவர்கள் மீது வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கினர். நன்கு திட்டமிட்ட இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்ட அரசபடைகள் கிட்டண்ணையின் போர்த்தந்திரத்தினால் திணறிக்கொண்டிருந்தன

கிட்டண்ணா அல்பேட்டிற்கு பரிபாசையில் தகவல் கொடுத்தார். சண்டை தொடர்ந்து நடப்பதால் எனக்கு 'அமினேசன்' அனுப்பு. அல்பேட் அதைக்கூறி வேலையை என்னிடம் ஒப்படைத்தான். எனக்கு அங்கிருந்து போவதற்கு விருப்பம் இல்லாவிட்டாலும் கட்டளைக்கு கீழ்ப்படிந்தேன்.

மேலதிக ரவைகளை எடுத்துக்கொண்டு சுதுமலைக்கு வந்து கிட்டண்ணாவுடன் வோக்கித் தொடர்பு எடுத்தபடியே கிட்டண்ணா சொல்கின்ற பாதையுனூடாகச் சென்று அவர் நின்ற இடத்தை அடைந்தேன். ஊகங்களின் அடிப்படையிலேயே அவரை அடையவேண்டிய பாதையைத் தெரிவித்துக்கொண்டிருந்தார். அவரின் ஊகங்கள் பொய்க்கவில்லை. அவர் காட்டிய பாதையால் என்னால் தடைகளின்றிப் போய்ச்சேர முடிந்தது.

அரசபடைகள் தங்கள் திட்டத்தின் முழுத்தோல்வியையும் சந்தித்துக்கொண்டு பின்வாங்கின. ''அல்பேட் காயப்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளான் என்னமாதிரியென்று தெரியேல்லையடாப்பா'' என்று கிட்டண்ணா சொல்

## "எங்கே? எங்கே? வேங்கைகள் எங்கே? இந்திய அரசே பதில் சொல்லு"

**லெப்டினன்ட் கேணல்**
**குட்டிசிறி**
[இராசையா ஸ்ரீதரன்]
சுதுமலை வடக்கு.
மானிப்பாய்.



லிக்கொண்டேயிருந்தார். சற்று நேரத்தில் சுற்றிவளைப்பைத் தகர்ப்பதில் முக்கிய பங் காற்றிய 'மேஜர் அல்பேட்' வீரச்சாவடைந்த செய்தி வந்தடைந்தது. கிட்டண்ணர் கண்ணீர்விட்டு யாரும் தேற்றமுடியாத அளவுக்கு குலுங்கிக்குலுங்கி அழுதார். நான் கிட்டண்ணாவுடன் பழகிய கால எல்லைக்குள் இரண்டு தடவைகள் மட்டும் அவர் அழுததைக் கண்டுள்ளேன். கப்டன் பண்டிதரை இந்த மண் இழந்த போது கிட்டண்ணா கண்ணீர்விட்டு கதறியதை முதல் தடவையும், அல்பேட் வீரச்சாவடைந்த போது இரண்டாம் தடவையுமாக என்னால் காணமுடிந்தது.

கிட்டண்ணாவின் சுதுமலை முகாம் ஓடுகள், வளைகள், சுவர்கள் எல்லாமே விழுப்புண் ஏற்று சிதைந்து கிடந்தன. அந்த முகாம் மட்டுமல்ல அயல் வீடுகள், செடி கொடிகள், மரங்கள் எல்லாமே அவ்வாறே காணப்பட்டன. அந்த முகாமிலேயே தொடர்ந்தும் இருக்கப்போவதாகக் கூறி முகாமைச் சுத்தம் செய்யுமாறு கிட்டண்ணா கட்டளையிட்டார். தூரத்தே இராணுவத்தினர் ஏவிய 'ஆர் பி, ஜி. ஷெல்' ஒன்று வெடிக்காமல் இருப்பதைக் கண்ட போராளி ஒருவன் கிட்டண்ணாவுக்கு அதைக் காட்ட, அவர் அதன் அருகில் சென்றார். கூடச் சென்ற நான் அதை எடுக்கக்குனிந்தேன். அவர் அதை எடுக்க வேண்டாம் என்று என்னைத் தடுத்துவிட்டு, தான் எடுப்பதற்கு முயன்றபோது நான் மீண்டும் அவரின் முன்னே சென்று குனிந்து ஷெல்லை எடுக்க முயன்றேன். கிட்டண்ணா தடுத்து தான் எடுப்பதாகக் கூறினார். இல்லையென்று கூறி நான் எடுக்க எத்தனித்தேன். உடனே மிகுந்த கோபத்துடன் 'ஆ ..'என்று உறுமினார். நான் எடுக்கும் எத்தனிப்பை நிறுத்திக்கொண்டேன்.

பின்னர், நன்கு அந்தச் 'ஷெல்'லை அவர் அவதானித்த பின்பு. தானே அதை எடுத்துப் பார்த்துவிட்டு என்னிடம் தந்தார். அந்த வேளையில் ஷெல் வெடிக்கும் நிலையில் இருந்தால் வெடித்து ஒரு போராளி வீரமரணம் அடைகின்ற நிகழ்வு ஏற்படுமானால் அது தனக்கு ஏற்படட்டும். தான் அருகில் நிற்கும்போது இன்னொரு போராளிக்கு சாவு ஏற்படக்கூடாது என்ற எண்ணமே முதலில் அவரை அந்தச் ஷெல்லை எடுப்பதற்கு தூண்டியதாக இன்றுவரை நான் எண்ணுகிறேன். உண்மையும் அது தான்.

எமது தலைவரின் நேரடி வழிகாட்டலில் வளர்ந்த, வாழ்ந்த கிட்டண்ணா தனது போராளிகள் மீது காட்டிய அன்பும், பரிவும் கரிசனையும் ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல. மற்றவர்களின் தேவையை அறிந்து நடக்கின்ற பண்பும், அவர்களின் நலன்மீது கொண்ட அக்கறையும், துணிவும் போராட்டத்தின்மீதும், தலைவரின்மீதும் கொண்ட விசுவாசமும் சேர்ந்துதான் தமிழீழத்தின் ஒருபகுதியான யாழ் மாவட்டத்தை அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து முன்னூறு வருடங்களுக்குப் பின்னர் மிகக்குறைந்தளவு போராளிகளுடன் புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்ததற்கான காரணியாகக் கூறலாம். கிட்டண்ணா இன்று இங்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால், விடுதலைப் புலிகளின் தமிழீழப் போராட்ட வரலாறு அவரின் நினைவுகளை இரை மீட்டியபடியே வாழும்.

"பொங்கிடும் கடலில் புலிமறவீரர்
போய் வரக்கூட முடியாதா? — நாம்
எந்தையர் கடலில் எழுந்திடக் கூட
இந்திய நாடு தடைதானா?"

# கிட்டண்ணா

# பன்முகப்பட்ட ஆளுமையின் கூட்டு வடிவம்

கஸ்ரோ

**"கிட்டண்ணா வெளிநாட்டில் இருந்தாலும் அவரது மனம்-எண்ணங்கள், சிந்தனைகள், எல்லாமே தமிழீழத்தைப் பற்றியதாகவே அமைந்தது. தமிழீழத்திலுள்ள வளங்கள், கலை பண்பாடுகள், அரசியல், செயற்பாடுகள், சமூகப்பணிகள், இராணுவ கட்டமைப்புகள், பயிற்சிமுறைகள், புகைப்படக்கலை போன்ற பலதுறைகளைப் பற்றிய தன்து எண்ணங்களை, அனுபவரீதியாக தான் பெற்றுக் கொண்டவற்றை, அறிவுபூர்வமாக தான் அறிந்தவற்றை விளக்கமாக, சிறு சிற குறிப்புகளாகப் பல மடல்களை எழுதினார். தலைவரைப்பற்றி அவர் பூரணமாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார்."**

ஒருமுறை லண்டனிலிருந்து வெளியாகும் "களத்தில்" பத்திரிகையினை தலைவருக்கு காட்டியபோது "இது கிட்டு தான் செய்யிறான் போல கிடக்கு. இல்லாட்டி இப்படி வராது. வேணுமெண்டால் விசாரிச்சுப் பார்" என்று கூறினார். ஏனென்றால் அது அவ்வளவு தரமாக இருந்தது. அதனது ஒவ்வொரு பக்கமும் நுணுக்கமாக திட்டமிடப்பட்டு படங்கள், கட்டுரைகள், கவிதைகள் போன்றன உரிய இடங்

களில் போடப்பட்டு, மெருகூட்டப்பட்டு இருந்தது. நிச்சயமாக கிட்டண்ணை தான் இதற்குப் பின்னாலிருக்கிறார் எனறு தெரிந் தாலும், வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவர் மூலம் இதனை உறுதிப்படுத்திக் கொண் டேன்.

சிகிச்சைக்காக கிட்டண்ணா இந்தியா விற்கு சென்ற போது கூட அவரால் வெறு மனே கையைக் கட்டிக் கொண்டு இருக்க முடியவில்லை. இந்திய இராணுவம் தமிழீ ழத்தில் புரிந்த கொடுமைகளை நூல் வடிவில் அம்பலப்படுத்திக் கொண்டிருந் தார். இந்நூல்கள் அச்சடிப்பது தொடர் பான வேலைகளை ஒரு போராளியிடம் ஒப்படைத்திருந்தார். ஒவ்வொரு நாளும் அந்தப் போராளியிடம் நூல்கள் எந்த நிலையில் உள்ளது என்பதைக் கவனமாக கேட்டறிவார். அத்துடன் அச்சடித்த பக்கங் களைப் பார்த்து அதிலுள்ள பிழை திருத்தங் களைக் கூறுவார். ஒரு முறை நான் கிட்டண் ணாவின் இடத்துக்குப் போனபோது அந்தப் போராளிக்கு கடும் பேச்சு விழுந்து கொண் டிருந்தது "தெரியாமல் இதுக்குள்ளே போய் மாட்டுப் பட்டு விட்டன்" என்று யோசித் துக் கொண்டிருக்கும் போதே "இவன் பிறசை (*Press*) பற்றி எனக்கு சொல்லு றான்" என்றார் என்னைப்பார்த்தபடியே. கிட்டண்ணா நூல் ஒன்றை குறிப்பிட்ட திகதிக்குள் அச்சடித்து முடிக்க வேண்டும் என்று அந்த போராளியிடம் கூறியிருந் தார். குறிப்பிட்ட திகதிக்கு அச்சடிக்க முடியாமல் போனதால் ஏதோ வியாக் கியானங்களை அந்தப் போராளி கிட்டண் ணாவிற்குச் சொல்லிக்கொண்டிருந்தான். கிட்டண்ணாவிற்கு அச்சடிக்கும் தொழில் மாத்திரமல்ல எந்தவொரு விடயத்திலும் பிழையான காரணம் கூறித் தப்பமுடியாது என்று எனக்கு நன்கு தெரிந்திருந்தது "விசயம் விளங்காமல் கதைக்கிறான் மடையன்" என்று நினைத்துக் கொண்டி ருக்கும் போதே அந்தப் போராளியை அழைத்து அவன் சொன்ன வியாக்கியானங் களுக்கு சரியான விளக்கங்கள் கூறிவிட்டு "நாளைக்கிடையிலே அடிச்சுக் கொண்டு வாறாய்" என்று அவனை அனுப்பினார்.

"நீ கடைசியாக வந்த இந்தியாருடே (*India Today*) யினைப் பார்த்தனியோ?" என்று என்னைக் கேட்டார். எதனை மனதில் வைத்துக் கொண்டு கேட்கிறார் என்று தெரியவில்லை. 'பிடிபடப்போகி றேனே' என நினைத்துக் கொண்டே "ஓம்" என்றேன். குறிப்பிட்ட விளம்பரம் ஒன்றின் பெயரைக்கூறி "அதைப் பார்த்தியா" என்று கேட்டார். எனது விழி பிதுங்கலா யிற்று. அடுத்த கட்டமாக என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. "இங்கே வா" என்று தனது மேசைக்கு அழைத்துச் சென் றார். அவரதுமேசையிலிருந்த இந்தியாருடே (*India To day*) இலெஸ்ரேட்டற் வீக்லி ஓவ் இந்தியா (*Illustrated Weekly of India*) போன்ற பல சஞ்சிகைகளில் உள்ள விளம்பரங்களைக் காட்டினர். "இதை ஏன் உனக்கு காட்டுறன் தெரியுமோ?" என்று கேட்டார். என்னால் பதில் சொல்ல முடியவில்லை. 'நான் புத்தகங் கள் எடுத்தால் முதல்பார்க்கிறது விளம் பரம் தான்" என்றார். "அதில தான் ராப்பா விசயம் இருக்கு" என்று கூறி முடித்தார். பின்பு எனது பதிலை எதிர் பாராமலே விளம்பரங்கள் எப்படி மக்களை கவர்ந்திழுக்க கூடிய வண்ணம் தயாரிக்கப் படுகின்றன என்றும், விளம்பரங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு அதன் நோக் கத்தை வெளிப்படுத்தும் வண்ணம் மிகவும் கவனமாக திட்டமிடப்பட்டு தயாரிக்கப் படுகின்றன என்றும், அதில் போடப்படும் படங்கள் வர்ண அமைப்புகள், நிறங்களின் பொருத்தமான தன்மை, அந்தப் பொருளை வாங்குவதற்கு கவரக்கூடிய அமைப்பு என் பனபற்றி நீண்ட நேரமாக விளங்கப்படுத் தினார். விளம்பரங்கள் தயாரிப்பதற்கு என்றும் (*lay out*) செய்வதற்கு என்றும் விசேடமாக படித்த தொழில் வல்லுனர்

கள் உள்ளனர் என்றும் இதற்காக தொழில் நிறுவனங்கள் உள்ளன என்றும் அதனைப் பற்றியும் விளக்கமளித்தார்.


''இதை ஏன் உனக்கு சொல்லுறன் தெரியுமோ?'' என்று என்னைப் பார்த்து கேட்டார். உண்மையாக எனக்கு அப்போது ஒன்றும் விளங்கியிருக்கவில்லை. ''எங்கட வெளியீடுகளையும் நாங்கள் செய்யேக் குள்ளே இதேபோலக் கஸ்ரப்பட்டு செய்ய வே ணு ம். ''அதைப்பார்க்கிறவர்களுக்கு வாசிக்க தூண்டோணுமடாப்பா'' என்றார் கிட்டண்ணை. இப்போதுதான் எனக்கு விளங்கியது. அப்போது கிட்டண்ணா இந்திய இராணுவத்தினது அட்டூழியங்களை வெளிப்படுத்தும்வகையில் ஏராளமான பிரசுரங்களை வெளியிட்டுக் கொண்டிருந் தார். இவைஎல்லாவற்றையும் இந்தியா விலும் வெளிநாட்டிலுமுள்ள தூதராலயங் கள் அரசசார்பற்ற நிறுவனங்கள், பத்திரிகை கள், அரசியல்கட்சி பிரமுகர்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள், முக்கியமானவர்கள் என எல்லோருக்கும் தொடர்ச்சியாக, அனுப்பிக் கொண்டிருந்தோம். இவர்களில் எத்தனைபேர் எங்களுடைய பிரசுரங்களைப் பார்த்திருப்பார்கள்? இவர்கள் எல்லோரும் பார்க்கத் தூண்டும் வகையில் எமது பிரசுங் களைத் தயாரிக்க வேண்டும். கிட்டண்ணா இதனை மனதில் வைத்துத் தான் செயற் பட்டார். இரவு பகலாக யோசித்தார். பலரை அழைத்து அபிப்பிராயம், ஆலோ சனை கேட்டார். அவரது கடினமான உழைப்பின்பயனாக 'தமிழீழம்' 'பவான் பேப்பர்ஸ்' *(Pawan Papers, you to India)* தியாகி திலீபன், கப்டன்லாலா ரஞ்சன் போன்ற பிரசுரங்கள் வெளிவந்தன. இவற் றில் தமிழீழம் 7 வெளியீடுகளும், பவான் பேப்பர்ஸ் 20 வெளியீடுகளும் வெளியிடப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த வெளியீ டுகள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஜன நாயகம், அகிம்சை என்ற இந்தியாவின் போலி முகத்திரைகளை இந்த நூல்கள் கிழித்தெறிந்தன. இந்தியாவின் சுயரூ பத்தை அம்பலமாக்கின.

கிட்டண்ணா விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களிற்கு பொறுப்பாள ராக நியமிக்கப்பட்ட பின்பு வெளிநாடு களிலும் பல மாற்றங்கள் ஏ ற் ப ட் ட ன. லண்டனிலிருந்து மாதமிருமுறை ''களத் தில்'' எனும்பத்திரிகை வெளிவரத் தொடங் கியது. பிரான்சிலிருந்து இதுவரை காலமும் நிழற்பட பிரதியில் வெளிவந்த 'எரிமலை' எனும் மாதாந்த சஞ்சிகை அச்சுக்கூடத் தில் ஏறி பல வர்ணங்களுடன், புதுமெரு

## எங்கே? எங்கே? வேங்கைகள் எங்கே?
## இந்திய அரசே பதில் சொல்லு!



**மேஜர் மலரவன் (வேலன்)**
[சுந்தரலிங்கம் சுந்தரவேல்]
வியாபாரிமூலை,
பருத்தித்துறை



குடன் 'கலை' பண்பாட்டு சமூக அரசியல் ஏடாக'' உலாவரத் தொடங்கியது. மாத மிருமுறை கனடாவிலிருந்து வெளியாகும் ''உலகத் தமிழர்'' எனும் பத்திரிகையும், நோர்வையிலிருந்து வருடத்திற்கு மும்முறை வெளிவரும் ''சுதந்திர தாகம்'' எனும் சஞ்சிகையும் கிட்டண்ணா பொறுப்பெடுத்த பின்பு புதுப் பொலிவுடன் வெளிவரத் தொடங்கின. இவற்றில் உலகத் தமிழர் ஆறாயிரம் (6000) அச்சிடப்பட்டு விற்ப னையாவது. எரிமலையும், களத்திலும் தலா எண்ணாயிரம் (8000) பிரதிகளும் குறிப் பிடத்தக்கது.

உலக நாடுகளின் கவனத்தை எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் பக்கம் ஈர்ப்பதற்காக பல முயற்சிகளை கிட்டண்ணா முன்னெடுத்தார். எமது விடுதலை இயக்கத்தின் வளர்ச்சி, தமிழீழ மக்களின் மீது இந்திய, சிறிலங்கா அரசு கட்டவிழ்த்து விட்ட அராஜகம், தமிழீழ மக்களது துன்ப, துயர நிலைகள் மாத்திர மன்றி, தமிழீழத்தின் வளங்கள், இயற்கைக் காட்சிகள், எமது மக்களினது கலை, பண் பாடுகள், பொருளாதார வாழ்வு போன்ற இன்னொரன்னவற்றை ஓவியங்களாகவும், புகைப்படங்களாகவும் கொண்டு பல்வேறு நாடுகளில் ஓவியக் கண்காட்சி, புகைப்படக் கண்காட்சிகள் போன்றவற்றை நடாத்தி னார். ஆங்கிலம், பிரெஞ்சு, டொச் லற்றின், நோர்வேஜியன் டான்ஸ் ஆகிய சர்வதேச மொழிகளில் விடுதலைப் போராட்டம்பற்றியும், களநிகழ்வுகள் பற்றியும் துண்டுப்பிரசுரங்களாகவும், சிறு சிறு கைநூல்களாகவும் ஏராளமாக வெளி யிட்டார் பிரெஞ் மொழியில் ''தமிழ்'' *(Tamule)* என்ற சிறு ஏட்டையும், டொச் சில் ''வணக்கம்'' என்ற சஞ்சிகையையும் நோர்வேஜிய மொழியில் ''தமிழ் ஈழம்'' எனும் ஏட்டையும் தொடர்ந்து வெளிவர செய்தார்.

''பேப்பர் விற்கப் போனால் சனங்க ளொண்டும் பேப்பர் வேண்டுதில்லை, ஆனால் அவையளின்ரை வீடுகளில் போய்ப் பார்த்தால் ரீ. வீ யென்ன, டெக்கென்ன, சாமான்கள் எண்டால் குவிஞ்சு போய் கிடக்கும்'' என்று வெளிநாட்டுக் கிளை யொன்றில் பணியாற்றும் உறுப்பினர் ஒரு வர் கிட்டண்ணாவிடம் குறை சொல்வது போல் கூறினார் கிட்டண்ணாவுக்கு கோபம் வந்து விட்டது ''இவ்வளவு சாமான்களையும் எங்கட சனங்கள் வைத்து அனுபவிக்கினம் என்றுதான் நாங்கள் சந்தோசப்படவேண்டும்'' என்று கோபமா கக் கூறியவர், ''ஒரு நாளும் எங்கட சனங் களைப் பேசக் கூடாது. நீ உன்ரை திறமை யைக் காட்டிப் பேப்பரை விற்கப்பார். சனங் களை மட்டும் குறை சொல்லாதே'' என் றார். இச்சம்பவம் நடந்தது வெளிநாடொன் றில்.

இப்படித்தான் ஒருமுறை மடு அகதி முகாமில் வாழும் மக்களின் வாழ்க்கை முறைபற்றி விமர்சித்து இங்கு வெளிவரும் சஞ்சிகையொன்றில் கட்டுரை ஒன்று வெளி வந்திருந்தது அதனைப் பார்த்த கிட்டண் ணாவிற்கு பொறுக்கவில்லை உடனடியாக அக்கட்டுரையினை விமர்சனம் செய்து பின்வருமாறு எழுதினார்.

''அக்கட்டுரை படித்தவுடன் என் நெஞ்சு பொறுக்கவில்லை. இதே சனத்துக்காகவும் அவர்களின் நல்வாழ்விற்காகவும் தான் நாம் போராடுகிறோம். அவர்களும் எம்முடைய சனங்கள். தலைவர் பார்த்தால் பொறுத் திருக்க மாட்டார்,

ஒவ்வொரு அகதியின் வாழ்விலும் எத்த னையோ சொல்லொணாத் துன்பங்களும் துயரங்களும் அடங்கியிருக்கிறது அத்துயரங் கள் எமக்குப் புரியமாட்டாது நானும் மத்தி யதர குடும்பத்தை சார்ந்தவன். எனக்கு அறிவும், அனுபவமும் உண்

வைத்துப் பார்த்தால் இக்கட்டுரை எழுதப்பட்ட விதம் மிகவும் பிழையானது. அச்சீர்கேடுகளை மாற்ற வேண்டியது நாமேதான். அப்பிழைகளும் எம்முடையதே.

"பிரபாகரனின் கொள்கைக்கு முரணானது. பிரபாகரன் என்ற சொல் இன்று ஒரு தனி மனிதனின் பெயர் அல்ல. அப்பெயருக்கு பல பொருள் உண்டு. பல அர்த்தங்கள் உண்டு.

நாம் அதே மனிதரோடு சமகாலத்தில் வாழ்வதால் இவற்றை சரியாக புரிந்து கொள்ளாமல் விடலாம்.

பிரபாகரன் என்றால் *Symbol of Freedom* என்றும் சிலர் கூறுகிறார்கள்.

இன்னும் எளிமை, மனிதநேயம், அன்பு ஆளுமை, தலைமை முக்கியமாக மக்களை நேசித்தால் எப்போதும் ஏழைகளையும், எளியவர்களையும் நேசிப்பது அவர்களுக்காகவே சிந்திப்பது இவைதான், 'பிரபாகரன்' என்றால் அர்த்தமாகிறது. இவை ஒரு தத்துவம். எமக்கு வழிகாட்டும் சத்திய போதனை. இவற்றைத்தான் எமது இயக்கமும் விடுதலைப் போராட்டமும் இலட்சியமாக கொண்டுள்ளது.

நானும் 18 வயதில் பள்ளிக்கூட படிப்பை இடையிலே கைவிட்டு பின் இன்று வரை இவ்வழிநடத்தலிலே. இப்போதனைகளையும், தத்துவங்களையும் படித்துத்தான் வளர்ந்தேன். இதை வைத்துத் தான் சிந்திக்கவும் பழகினோம். இப்படியான கால கட்டத்தில் மேலெழுந்த விதமாக சனங்களைப் பற்றி இப்படி எழுதுவது சரியல்ல"

எவ்வளவு ஆழமான கருத்துக்கள். எமது தலைவரைப் பற்றியும், மக்களைப் பற்றியும் கிட்டண்ணா எவ்வளவு தெளிவாக தீர்க்கமாக கூறியிருக்கிறார்.

கிட்டண்ணா வெளிநாட்டிற்கு போன பின்பு அங்கு நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. இதுவரை காலமும் போராட்டத்திலிருந்து ஒதுங்கியிருந்த புத்திஜீவிகள், மாணவர்கள், வேலை பார்ப்பவர்கள், அகதிகள் என பலதரப்பட்டவர்களை அவர் அரவணைத்துக் கொண்டார். ஒவ்வொரு தமிழனுக்கும் தாயகத்தின் விடுதலைக்கான கடமையினை, பங்களிப்பினை அவரது அன்பாலும், ஆளுமையாலும் உணரச்செய்தார். விடுதலைப் புலிகளது வெளிநாட்டுக் கிளைகளின் செயற்பாட்டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். அவுஸ்திரேலியா, சுவிட்சிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் "தமிழர் ஒருங்கிணைப்பு குழு" எனும் அமைப்பை ஆரம்பித்து வைத்தார். இவை மாத்திரமல்லாமல் விடுதலைப் புலிகளின் எல்லா கிளையமைப்புகளையும் அந்தந்த நாடுகளில் பதிவு செய்து அந்தந்த நாட்டின் சட்ட ஒழுங்கிற்கு *(Law & Order)* மதிப்பு கொடுத்து, அதற்கமையவே வேலைத்திட்டங்களை அமைத்துக் கொடுத்தார். விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டு கழகம், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் போன்ற பல உப அமைப்புகளையும் பல்வேறு நாடுகளில் நிறுவினார். கலை பண்பாட்டுக் கழகம் வெளிநாடுகளில் ஏராளமான இசை நிகழ்ச்சிகளையும், கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தியுள்ளது. வெளிநாட்டுத் தமிழர்களிடம் மாத்திரமல்லாமல் வெளிநாட்டவர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பை இந்நிகழ்ச்சிகள் பெற்றுள்ளன. அண்மையில் சுவிஸ் நாட்டில் கலை பண்பாட்டுக் கழகம் தயாரித்து மேடையேற்றிய நாடகம் ஒன்று ஐரோப்பாவில் நடந்த நாடகப் போட்டிகளில் (பல்வேறு மொழிகளில்) முதலாவது பரிசை தட்டிச் சென்றது குறிப்பிடத்தக்கது ஆகும். வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்களிடையே எமது பண்பாடுகளை விடாப்பிடியாக பேணுவதற்கும், வெளிநாட்டவர் மத்தியில் எமது பண

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



பாட்டின் விழுமியங்களை உணர்த்துவதற்கும் கலை, பண்பாட்டுக் கழகம் பாடுபட்டு வருகிறது. இதே போலவே விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பும், சிறுவர்களிற்கான தமிழ்ப் பாடசாலைகளை ஆரம்பித்தல், தமிழ் இளைஞர் மத்தியில் ,மெய் வல்லுனர் போட்டிகளும், உதைபந்தாட்டப் போட்டிகளுமாக நிறைய வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றனர். பொருண்மிய மேம்பாட்டுக்கழக வெளிநாட்டுக் கிளையினரும் தமிழீழ வளங்கள் குறித்தான பல ஆய்வுகளை மேற்கொள்ளுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான செயற்பாடுகள் எல்லாவற்றுக்கும் மூலபலமாக நின்றவர் கிட்டண்ணா என்றால் மிகையாகாது.

சுவிட்சலாந்து நாட்டில் ''ஈழநாதம்'' எனும் உள்ளூர் வானொலி சேவையினையும், கனடாவில் மொன்றியல், டொரொன்ரோ ஆகிய நகரங்களிலும் உள்ளூர்வானொலி சேவையினையும் ஆரம்பித்து அங்குள்ள தமிழ் மக்களுக்கு விடுதலையுணர்வை பரப்பினார். வளர்ந்து வரும் நவீன உலகில் சிறந்த பிரச்சார உத்தியாக ஒளிப்பதிவு நாடா திகழ்வதை அவதானித்த கிட்டண்ணா இதனை நன்கு பயன்படுத்தினார். தமிழீழத்தில் ''நிதர்சனம்'' என்ற புலிகளின் தொலைக்காட்சி சேவையினை ஆரம்பித்தது போன்று வெளிநாட்டுத் தமிழர்களிற்காக ''தரிசனம்'' என்ற வீடியோ சஞ்சிகையினை மாதந்தோறும் பிரான்சிலிருந்து வெளிவரச் செய்தார்.

கிட்டண்ணா வெளிநாட்டில் இருந்தாலும் அவரது மனம், எண்ணங்கள், சிந்தனைகள் எல்லாமே, தமிழீழத்தைப் பற்றியதாகவே அமைந்தது. தமிழீழத்திலுள்ள வளங்கள், கலை பண்பாடுகள், அரசியல் செயற்பாடுகள், சமூகப்பணிகள், இராணுவ கட்டமைப்புகள், பயிற்சிமுறைகள், புகைப்படக்கலை போன்ற பலதுறைகளைப் பற்றிய தனது எண்ணங்களை, அனுபவரீதியாக தான் பெற்றுக் கொண்டவற்றை, அறிவுபூர்வமாக தான் அறிந்தவற்றை விளக்கமாக, சிறு சிறு குறிப்புகளாக பல மடல்களை எழுதினார். தலைவரைப்பற்றி அவர் பூரணமாக தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார். ஒரு இடத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்.

''வெளிநாடுகளில் வாழும் மக்கள் எமது தலைவரின் மீது அதிகமான நம்பிக்கையையும், உறுதியையும் கொண்டுள்ளனர். சில இடங்களில் இயக்கத்தை நம்பா விட்டாலும் தலைவரை நம்புகின்றனர். இப்படியாக எமது தலைவர் தனிப்பெரும் தலைவர் என்று தான் மக்களால் கணிக்கப்படுகிறது.''

மக்களின் மீது அவர் ஆழ்ந்த பற்று வைத்திருந்தார் இராணுவ கெடுபிடிகள், பொருளாதாரத் தடை, போக்குவரத்து தடை போன்ற அழுத்தங்கள் தமிழீழ மக்கள் மீது திணிக்கப்படும் போதெல்லாம் அவர் வேதனைப்பட்டார். ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போதும் இடம் பெயரும் மக்களின் நிலை குறித்து கவலை கொண்டார். இளவாலை, மாதகல் பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் முன்னேறி வந்த போது கீழே குறிப்பிட்டவாறு அவரது சிந்தனை வெளிப்பட்டது.

''இடம்பெயர்ந்து. அகதிகளாகும் சனங்களைப் பொறுத்த வரையில் மிக முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டும். எமது அமைப்பின் மாணவர், மகளிர், அரசியல், கலை, கலாச்சார...இப்படியான எல்லாப் பிரிவினரும் இராணுவப் பிரச்சனையால் இடம் பெயரும் சனங்களின் விடயத்தில் உடனடியாகவும், அதிகமாகவும் கவனம் செலுத்தப்படவேண்டும்.

போராட்ட உச்சக்கட்ட வேளையில் கூட பொது மக்களை அதன் தாக்கம்

பாதிக்காத வகையில் நாம் பல விடயங்களை திட்டமிட்டு செய்ய வேண்டும்.

சமயம் கிடைக்கும் போதெல்லாம் சனங்கள் சந்தோசமாக இருக்கக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்குதல், விழாக்கள் திருவிழாக்கள் போன்று பல விடயங்களை நாமே ஊக்குவிக்கலாம்.

அதே வேளை சனங்களைப் போராட்டத்துடன் ஒன்று திரட்டுவதற்கான திட்டங்களையும் போட வேண்டும்''

வெளிநாட்டிலிருந்து அவர் நிம்மதியாக வேலை செய்ய இந்தியஅரசு விடவில்லை. அவர் எழுதிய மடலொன்றிலிருந்து இது வெளிப்படுகிறது.


''நான் நலம், நாடு நாடாக ஓடிக் கொண்டிருக்கிறேன். பாரத மாதாவின் புண்ணியத்தால் பல நாடுகளுக்கு விரட்டப்படுகிறேன். இருந்தும் நலம்...''

மேற்குலக நாடுகளில் கூட இந்தியாவின் அழுத்தங்கள் எவ்வளவு தூரம் பாய்ந்துள்ளது என்பதை இந்த வரிகள் விபரிக்கின்றன.

இத்தனை கெடுபிடிகளுக்கு மத்தியிலும், மேற்கு நாடுகளில் கூட வெளிப்படையாக உலாவ முடியாத நிலையிலும் அவர் பல மேற்கு நாடுகளுடனும், மனித உரிமை அமைப்புகளுடனும், அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். பல விடுதலை அமைப்புகளுடனும், பல அரசியல் கட்சிகளுடனும் உறவுகளை வளர்த்துக் கொண்டார். சிறிலங்கா அரசின் கெடுபிடியான இராணுவ நடவடிக்கைகளிற்கும், பொருளாதார நெருக்கடிகளிற்கும், போக்குவரத்து தடை போன்ற இறுக்கங்களிற்கும் தமிழீழ மக்கள் முகம் கொடுப்பதை நன்குணர்ந்து கொண்டார். மக்களின் இன்னலகளையும், துன்ப துயரங்களையும் நன்கு புரிந்து கொண்டதால் மேற்குலக நாடுகளுடனும், பல்வேறு மனித உரிமை அமைப்புகளுடனும் கலந்துரையாடி, விவாதித்து சமாதான திட்டமொன்றைத் தயாரித்துக் கொண்டார். இதனை எடுத்துக் கொண்டு தாய் நாட்டின் மீது காலடியெடுத்து வைக்க வேண்டுமென்ற துடிப்புடன் இருந்தார். அவரது துடிப்பு இவ்வாறு வெளிப்பட்டது.

''எப்போது எமது மண்ணிலே கால் வைப்பேன் என்று ஒவ்வொரு கணமும் ஏங்கிக் கொண்டிருக்கிறேன். எனது தாயகத்

**எங்கே? எங்கே? வேங்கைகள் எங்கே?**
**இந்திய அரசே பதில் சொல்லு!**



**கடற்புலி**
**கப்டன் ஜீவா**
[நடராசா மார்க் ஜெயராஜ்]
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.



திலே எங்கேயாவது ஒரு மூலையிலேனும் என்ன வேலையாவது செய்து கொண்டிருந்தாலே அது மனதுக்கு முழு அமைதியைக் கொடுக்கக் கூடியது.

இங்கு இவ்வளவு காலமும் தமது முக வரிகளைத் தொலைத்து விட்ட எமது மக்களின் மத்தியிலும், இப்போது நாடிருந்தும் நாடோடியாக ஓடுகிறேன்.

தனக்கென்று ஒரு சுதந்திரநாடு அமையும் போதுதான் ஒவ்வொரு தமிழனும் தலை நிமிர்ந்து வாழ முடியும். என்னால் வெளிநாடுகளில் வாழமுடியவில்லை. எனது சுபாவம் அப்படி - இப்போது தான் புரிகிறது. நாம் எமது மக்களையும், மண்ணையும் எவ்வளவு தூரம் நேசிக்கிறோம் என்பது. இன்னும் எத்தனையோ பிறவிகள் எடுத்தாலும் எனது மக்களுக்கும் மண்ணுக்கும் சேவை செய்யும் பேறு எனக்கு கிடைக்க வேண்டும். நாம் எமது மண்ணின் ஒவ்வொரு அங்குலத்திற்கும் போரிட்டவர்கள். ஒவ்வொரு வீட்டையும் பிடிப்பதற்காக போரிட்டவர்கள். எப்படி இம்மண்ணை பிரிந்து வாழ முடியும்?...''

நிச்சயமாக இந்த மக்களையும், மண்ணையும் பிரிந்து வாழ கிட்டண்ணாவினால் முடியாது. இதனால் தான் சமாதானத்திட்டத்துடன் புறப்பட்டு வந்தார். அந்த சமாதானப் புறாவை இந்திய ஆதிக்கக்கரங்கள் மரணப்பொறிக்குள் வீழ்த்தியது

எமது விடுதலைப் போராட்டத்திலுள்ள தர்மமும், உண்மையும் நிச்சயமாக இதற்கு பதில் சொல்லும்... □□

தேசிய ... மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்

''பல வெளிநாட்டு நிருபர்களை எமது போராட்டம் வியக்கவைத்திருக்கிறது. குறிப்பாக, போரிடும் போது இராணுவத்திடம் அகப்பட்டால் சயனைட் அருந்தி வீரமரணம் அடையும் எமது போராளிகளின் தியாகச் செயலை மிகவும் புகழ்ந்தார்கள். எமது தியாகப் பயணத்தில் இதுவரை 225க்கு மேற்பட்ட எமது தோழர்கள் சயனைட் சாப்பிட்டு சரித்திரமாகி இருந்தார்கள். உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் நடைபெற்றிருக்காத இந்தத் தியாக சாதனை வெளிநாட்டவர்களை வியக்கவைத்ததில் ஆச்சரியமில்லை. இத்துடன் ''பிளாக் டைகர்ஸ்' என்ற தற்கொலைப்படையினரின் வீரப்போரையும் குறிப்பிடலாம். புறநானூறில்தான் தமிழர்தம் வீரங்களைப் பற்றிக் கேள்விப்பட்டு அதிசயித்திருக்கின்றோம். அந்த நடைமுறையில் உலகுக்குச் செய்துகாட்டிய சமீபகால தமிழரின் வீரமறவப் போராட்டத்தில் புதிய சரித்திரம் எழுதிய புலிகளின் இயக்கம் என்ற முறையில் நான் பெருமைப்படுகிறேன்.''

**கேணல் கிட்டு**

தமிழகத்தில் தேவி வார இதழுக்கு 1989 ம் ஆண்டு வழங்கிய செவ்வியிலிருந்து.

# புலியுடன் தானா "இந்தி" அரசு பகைத்துப் பார்க்கும்?

இந்திய அரசே எங்கள்
இதயமாம் தமிழீ ழத்தில்
வந்துமே முன்னர் செய்த
வகையெலாம் மறந்து போமோ?
முந்தியும் கொன்ற(து) எங்கள்
முனைகளின் வேங்கை தம்மை
இந்தியா! இன்றும் பத்துப்
புறாக்களை எதிர்த்துக் கொன்றாய்!

சிங்களப் படைக ளெல்லாம்
சிதறிட வைத்தான்; 'கிட்டு'
பொங்கியே நின்றான். போரில்
புதுமைகள் செய்தான், அண்ணன்
இங்கினி இல்லை என்றால்
எம்மனம் தாங்கு மோதான்?
எங்குமே பொங்கும் கண்ணீர்
எதிரியை மூடி டாதோ?

இதழுக்கு வருதல் முன்னே
இடையிலே நின்று போன
உதயத்தின் சிரிப்பே! எங்கள்
உணர்வுக்குள் கலந்தாய்; மக்கள்
இதயத்தைத் திறந்து பார்த்தால்
அதிலெலாம் நீயி ருப்பாய்
இதயத்தில் நீயி ருந்தே
எங்களை ஆளு வாயே.

அலையது பொங்கி வந்தே
அண்ணனைக் கொன்ற தாமோ?
மலையென நிமிர்ந்த 'ஆசாத்'
படகினைப் புயல்வீழ்த் திற்றோ?
விலையதில் லாத பத்து
வேங்கைகள் வங்கந் தன்னில்
கொலையர(சு) 'இந்தி' யாவின்
சதியினால் வெந்து போனார்!

பொலிவுடன் துலங்கும் ஈழம்
புன்னகை மறைந்து போச்சு
வலியுடன் சேர்த்து நெஞ்சில்
வலிமையும் வளர்ந்தே ஆச்சு
புலியுடன் அந்த இந்தி
அரசது பகைத்துப் போனால்
கிலியுடன் தானே பின்னர்
இந்தியா உறவு கொள்ளும்!

இளந்திரையன்

## தமிழீழக் கலை, இலக்கிய பத்திரிகையாளர்கள் இணைந்து இந்திய அரசுக்கு எதிராக நடத்திய கண்டனப் பேரணி (27 - 01 - 93 புதன்கிழமை)





# வஞ்சகரால் எங்களது குயில் மடிந்ததோ?

வல்வைக் கரையெழுந்த புயல் ஓய்ந்ததோ?
வண்ணத் தமிழீழ மலை சரிந்ததோ?
வங்கக் கடல்மடியில் புலி தவித்ததோ?
வஞ்சகரால் எங்களது குயில் மடிந்ததோ?


சிங்களத்துப் படைகலங்கும் நாமம் கொண்டவன்
சிந்தனையில் ஈழமக்கள் வாழ்வைக் கண்டவன்
சிறுமலர்கள் இதயமதில் சிரித்து நின்றவன் — சினம்
கொண்டெழுந்து தன்னுயிரைத் தானே தகர்த்தவன்.

நெஞ்சமதில் விடுதலைத்தீ ஏந்தி நின்றவன் — தலைவன்
கனவுகளின் உருவெடுத்து களங்கள் வென்றவன்
இரக்கமற்ற கொடியவரின் நினைவ றிந்தவன் — வந்த
கப்பலோடு தானெரிந்து மானம் காத்தவன்.

வெங்களங்க ளாடியவெம் வேங்கை வீழ்ந்ததால்
வேதனையில் இதயமெலாம் வெந்து போகுதே
வீரமுள்ள தளபதியை இழந்து போனதால் — எங்கள்
நெஞ்சமெலாம் தவித்தவனைத் தேடி நிற்குதே!

தமிழவள்

## எங்கே? எங்கே? வேங்கைகள் எங்கே?
## இந்திய அரசே பதில் சொல்லு!



கடற்புலி
கப்டன் குணசீலன்
(குணராஜ்)
[சேகரன் குரூஸ் மைக்கல் ஜீவா]
மணியந்தோட்டம்,
யாழ்ப்பாணம்.



# நினைவழியா நாட்களும், நெஞ்சில் மூண்ட நெருப்பும்.

**புதுவை இரத்தினதுரை**

அன்று;
எங்கும் இடிமுழங்கும்;
எறிகணைகள் கூவிவரும்;
எதிரி எம்மண்ணில்வர எத்தனிப்பான்;
என்றாலும் இங்கே பதட்டம் இருக்காது;
கடைகள் திறந்திருக்கும்;
கோயில் கொடியேற்றம் இனிதே நடந்தேறும்;
சின்னத்தங்கை பள்ளிக்குப்போவாள்;
இறக்கையில் பெரிய குண்டுகள் சுமந்து,
“இரும்புப்பறவை” வட்டங்கள் போடும்;
கீழேவந்து “எச்சங்கள்” போட்டு,
கிளம்பிக்கொண்டு மீண்டும் போகும்.
என்றாலும் எம்மண் பயந்து நடுங்காது.
எங்கும் இன்னிசை நிகழ்ச்சி நடக்கும்;
‘‘நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்;”
காற்றில் இந்தக் கானம் கலக்கும்;
காத்தவராயன் கூத்துத் தொடங்கும்.
எல்லோருக்கும் ஒரே ஒரு நம்பிக்கை.
‘‘அவர்கள் விழித்திருப்பார்கள்.”
நம்பிக்கை என்றும்
பொய்யாகிப் போகாது.
வாகனத்திலேறி புலிகள் விரைவர்;
‘‘கிட்டு” தன்காரில்......தெருவைக்கிழித்து,
களத்துக்குப் போவதைக் கண்டு மகிழ்வர்.
சற்றுநேரத்தில் சத்தங்கள் ஓயும்;

மரக்கிளைகட்டி உருவம் மறைத்த,
"50 கலிபர்" பூட்டிய "பிக்கப்,"
அங்கும், இங்கும் ஓடித்திரியும்.
"கிட்டு" அந்த "வானில்" நின்று,
தோள்கள் உதறச் சுடுவதைப் பார்க்கலாம்;
குண்டுசுமந்து வந்துமிரட்டிய,
இயந்திரக் கழுகு எங்கோ மறையும்,
இன்று,
"50கலிபர்" அழுகிறது,
"கிட்டு எங்கே? கிட்டு எங்கே?
தொட்டுத் தழுவிய தோழன் எங்கே?
"இரு, இரு திரும்பி வருவேன்" என்று!
என்னிடம் சொல்லிப் போனவன் எங்கே?
தளபதிதிரும்பித் தாயகம் வருகையில்,
கடலில்மறித்த கைகளைக் காட்டு!"
கப்பலின் மேல்தளத்தில்...
நெடிய பனைபோல நிமிர்ந்து நின்று,
கடைசிமணித்துளி என்னடா நினைத்தாய்?
கப்பல் தகர்ந்து கனல் மூண்ட போது,
என்தோழனே! என்னடா நினைத்தாய்?
தாயை நினைத்தாயா? தாரத்தை நினைத்தாயா
தலைவன் முகத்தோடு,
தாயகத்தை நினைத்தாயா?
இதயமற்ற இரும்புச் சுடுகலன்,
எனக்கே விழிநீர் சொரியும் போது,
நெஞ்சில் உன்னைச் சுமந்த தாயகம்;
நெருப்பாய் நிற்கும் உனது தோழர்;
உலகத்திசைகளில் வாழும் நண்பர்;
உன்னை வளர்த்த உயர்ந்த தலைவன்,
எப்படிப் பொறுத்து இருந்திடக் கூடும்?
உனது நினைவை நெஞ்சில் சுமந்து,
எமதுபயணம் இனியும் தொடரும். □□

# 'கிட்டு' ஒரு தனிமனித சரித்திரம்



தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்.

மனதின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளில் சித்தரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பி விடும் ஒரு உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்க முடியாது. எனது அன்புத் தம்பி 'கிட்டு'வின் இழப்பும் அப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோக நிகழ்வு. அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது.

நான் 'கிட்டு'வை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக் நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்றுணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில், நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தில், ஒருவரை ஒருவர் ஆழமாக இனம் கண்ட புரிந்துணர்வில், வேரூன்றி வளர்ந்த நேயம் அது.

அவனுள் ஒரு அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டுகொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்து சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தது. அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான்; போராடினான். அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும், எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது.

'கிட்டு' ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக் கொண்டது. 'கிட்டு', நீ சாகவில்லை;

ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கின்றாய்.

*''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''*

## மானமுள்ளவன் சரணாகதியடையான்

நாம் பல வீரர்களைப் போரில் இதுவரை இழந்துவிட்டோம். இத்தனை இழப்புக்களுக்குப் பின்னரும் சுதந்திர தமிழீழம் என்ற எமது உயிருக்குயிரான நோக்கத்திலிருந்து நாம் அணுவளவேனும் விட்டுக் கொடுத்ததில்லை. விட்டுக்கொடுக்கப் போவதுமில்லை. எமக்குத் தமிழ் மக்கள் தமிழீழத்தை மீட்கப் போரிடுமாறு ஆணைவழங்கியுள்ளனர்.

எமது தலைவர் பிரபாகரன் முதல் இயக்கத்தின் கடைசிப் போராளிவரை எமது வாழ்வு நிரந்தரமென்று எண்ணிக்கொண்டு போர்க்களத்தில் குதிக்கவில்லை. எமது வாழ்வு நிச்சயமற்றது. எமது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த பத்து ஆண்டு கால வரலாற்றைப் படைத்தது. நாம் தமிழீழ நாட்டை மீட்பதற்கு ஆயுதமேந்தியுள்ளோம். மானமுள்ள மக்கள் மாற்றானிடம் ஒருபோதும் சரணாகதியடைய மாட்டார்கள்.

கேணல் கிட்டு
(ஈழமுரசு 27 - 01 - 1987)

1986 இன் ஆரம்பத்தில் ஒரு நாள் யாழ் கோட்டையில் இருந்து இராணுவம் வெளிவருகின்றது. சண்டைக்குப் புறப்படுகின்றோம். கிட்டண்ணா 'கமரா' ஒன்றைத் தந்து படம் எடுக்கும்படி கூறுகின்றார். நானோ அதற்கு முன் படமெடுத்ததில்லை. ஒரு 'பட்டினை' க் காட்டி ''இதை அழுத்து படம் எடுக்கும்''

''டெவலப்' பண்ணி 'நெக்கடிவ்'வைபார்க்கும்வரை என்னுள் எழுந்த உணர்வுகள்... ......'டெவலப்' பண்ணிய சக போராளி, எல்லா 'றோலி' லும் படம்வந்துள்ளது என்று கூறும்போது என்னுள் எழுந்த உணர்வுகள் ...'நெக்கடிவ்' காய்ந்தவுடன் அவற்றுடன் கிட்டண்ணாவிடம் செல்கிறேன். அவற்றைப் பார்த்து அவற்றிற் சிலவற்றை நல்ல

# வித்தைகளின் விளைநிலம்

''இயக்கத்தின் ஆரம்ப வளர்ச்சிக் காலம்.
மிகவும் கஷ்டப்பட்டு கிட்டண்ணா
புகைப்படம் பிடிக்கப் படிக்கின்றார்.
கைச் செலவுக்குக் கொடுக்கப்படும் பணத்தை
'பிலிம் றோல்' வாங்குகிறார்.
விதம்விதமாக அலைந்து திரிந்து
படமெடுக்கின்றார். மிகவும் ஆர்வத்துடன்
அதை 'டெவலப்' செய்கின்றார்.

**சிங்காரம்**

என்று கூறினார். நானும் ஓடிஓடி அந்த 'பட்டினை' அழுத்துகிறேன். இப்படியே ஒரு 'பிலிம் றோலை' முடித்து விட்டேன். எப்படிக் கழற்றுவதென்று தெரியாது. என்ன செய்வது என்று தெரியாது முழுசிக் கொண்டு நிற்கின்றேன். எனது நிலை கிட்டண்ணாவுக்குப் புரிகின்றது. 'கமரா'வை வாங்கி 'றிவைன்' பண்ணி புது றோல்' போட்டுத்தருகின்றார் மீண்டும் ஓடிஓடி அந்தப் ,பட்டினை' அழுத்துகின்றேன். இப்படியாக ஆறு'றோல்' முடிந்து ஏழாவது'றோலி' லும் முக்கால் பங்கு எடுத்துவிட்டேன். முகாம் திரும்புகின்றோம். ''எத்தனை 'றோல்'எடுத்தனீ'' எனக் கிட்டண்ணா கேட்கிறார். பயத்துடன் 'ஏழு' என்கிறேன். சரி கொண்டுபோய் 'டெவலப்' பண்ணு'' என்கிறார்.

கோணம். நல்லபடம் என்றும், சிலவற்றில் என்ன செய்தால் நன்றாக வந்திருக்குமென்றும், சில மங்கலாக இருந்தவை ஏன் அப்படி வந்தன என்றும் விளக்கி புகைப்படம் பிடிப்பது சம்பந்தமாகச் சில விடயங்களைக் கூறுகிறார். ''இதுஒரு ஒட்டோமற்றிக் கமரா என்றபடியால் உனக்குப் பிரச்சனை வரவில்லை. ஆனால், நான் பழகும் போது ..''

இயக்கத்தின் ஆரம்ப வளர்ச்சிக் காலம். மிகவும் கஷ்டப்பட்டு கிட்டண்ணா புகைப்படம் பிடிக்கப் படிக்கின்றார். கைச் செலவுக்குக் கொடுக்கப்படும் பணத்தை மிச்சம் பிடித்து ஒரு 'பிலிம் றோல்' வாங்குகிறார். விதம்விதமாக அலைந்து திரிந்து படமெடுக்கின்றார். மிகவும் ஆர்வத்துடன் அதை 'டெவலப்' செய்கின்றார். சிறு தவறினால்

படம் ஒன்றும்கூட வரவில்லை. தளராத மனத்துடன் கிட்டண்ணா மேற்கொண்ட முயற்சிகள் புகைப்படத் துறையில் எம்மை வழிநடத்தும் ஒரு ஆசானாக உயர்த்தியது. வெளிநாடுகளில் இருக்கும் பொழுது கிட்டண்ணா எனக்கு எழுதியவைகூட எம்மை வழிநடத்தப் பெரிதும் உதவுகின்றது. ''நான் பக்கம் பக்கமாக எழுதுவதைவிட ஒரு நல்ல புகைப்படம் பலவிடயங்களைச் சொல்லக் கூடியது. எழுத்து வடிவில் உள்ள தகவல் களைவிட படங்கள் வழியாகக் கொடுக்கப் படும் தகவல்கள் மிக இலகுவில் மக்களைச் சென்றடையக் கூடியவை.

இன்றைய உலகில் படங்கள் ஓர் எளிய பிரசாரச் சாதனமாகப் பாவிக்கப்படுகின் றன. எமது போராட்டத்திலும் உள்ளூரி லும், சர்வதேசத்திலும் நாம் எமது பிரச் சனைகளை எடுத்துக் கூறுவதற்குப் புகைப் படங்கள் மிக முக்கியம்.

புகைப்படங்கள் பிரசாரத்திற்கு மட்டு மல்ல. நாளைய எமது சந்ததிக்கு நாம் விட் டுச் செல்லும் வரலாற்றுச் சான்றுகளும் இவைதான். எனவே எம்முடைய விடுத லைப் போராட்ட வரலாற்றில் அதற்குரிய முக்கியத்துவமும் கவனமும் செலுத்தப்படல் வேண்டும். சர்வதேச அரங்கில் எமது போராட்டத்தைப் பற்றியும், பொது மக் களுக்கு இழைக்கப்படும் இன்னல்கள் பற் றியும், எமது மக்கள் படும் அவலங்கள் பற்றியும் எடுத்துக் காட்டுவதற்கு தரமான புகைப்படங்கள் அவசியமாகின்றது. புகைப் படங்களின் அவசியத்தை நாம் ஒருவாறு உணர்ந்து கொண்டாலும், அப்புகைப்படக் கலையை வளர்ப்பதில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டியவர்களாகின்றோம். புகைப்படம் பிடித்தல் என்பது ஒரு கலை. புகைப்படம் எல்லோராலும் எடுக்க முடியும். இன்றைய நவீன உலகில் மிக நுண்ணிய தொழில்நுட்பம் வாய்ந்த 'கமராக்கள்' வந்து விட்ட வேளையில் எந்த முட்டாளும் பட மெடுக்க முடியும். ஆனால், ஒரு நல்ல கலைஞனாலேயே நல்ல தரமான படங்க ளைக் கொடுக்கமுடியும்.

எமது பையன்களை நாம் நன்கு வளர்க்க வேண்டும். நல்ல தரமான 'சர்வதேசத் தரத் திற்கு ஏற்ப படமெடுக்கக்கூடிய அளவுக்கு அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். புகைப்படம் எடுப்பவர்களை, நன்கு யோசித்து கற்பனை வளத்தை வளர்க்கப் பழக்க வேண்டும். கமராவை வைத்திருப் பவர் கமராவை மட்டுமல்ல அதனுடன் தன்னுடைய கற்பனையையும் சுமந்துதிரிய வேண்டும்.''

கிட்டண்ணா எல்லாக் கலைகளிலும், எல்லாத் துறைகளிலும் ஆர்வமுள்ள ஒரு அற்புதமான மனிதன். □□

## எங்கே? எங்கே? வேங்கைகள் எங்கே?
## இந்திய அரசே பதில் சொல்லு!



**கடற்புலி**

**கப்டன் றொசான்**

[இரத்தினசிங்கம் அருணராசா]

நல்லூர்,

யாழ்ப்பாணம்.



கிட்டண்ணை,
தலைவரின் கையில் வளர்ந்த,
தலைவரின் கையால் ஊட்டி வளர்த்த குழந்தை,
அற்புதமான கலைஞன்.
சித்தைத் தொடும் எழுத்தாளன், நல்ல வாசகன்,
புலியாய் செயல்படும் போர் வீரன்,
தானை வழிநடத்தும் தளபதி,
மக்களை வசப்படுத்தும் தலைவன்,
பிரமிக்கவைக்கும் மனிதன்.
அற்புதமான போராளி.

கிட்டண்ணையின் எண்ண ஓட்டங்களுக்கு ஈடு கொடுப்பது கடினம். இயக்கத்தின் எந்த ஒரு பணியானாலும் புதிய, புதிய எண்ணங்களை வெளிப்படுத்துவார். ஒவ்வொரு துறையும் எப்படி செயல்பட வேண்டும் என்பதுபற்றி நீண்டவிரிவுரை நிகழ்த்தும் அளவிற்கு ஒவ்வொன்றையும் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து வைத்திருந்தார்.

பிரமிப்பூட்டுவது. தனது நிர்வாகத்திற்கு உட்பட்ட எந்தவொரு வேலைகளிலும் அவரது ஈடுபாடு, தலையீடு அளவுக்கு அதிகமாகவே இருக்கும். ஒவ்வொரு சிறிய விடயத்திலும் அவரது அதீத ஈடுபாடு, கண்காணிப்புக் காரணமாக எந்தவொரு அனுபவம்குறைந்த புதியஆட்களை வைத்தும் பெரிய வேலைத்திட்டங்களை அவரால் செய்யமுடிந்தது. தன்னுடன் பணியாற்றும்,

# 'கிட்டண்ணா' ஒரு அற்புதமான போராளி

## ச. பொட்டு

வெறுமனே சிந்தித்துவிட்டு, சொல்லிவிட்டு, எழுதிவிட்டு, அதனை மறந்துவிடும் அல்லது கைவிடும் சாதாரணமனிதர் அல்ல கிட்டண்ணை. அவரது எல்லாச் சிந்தனைகளும் செயல்வடிவம் பெறவேண்டும் என்பதில் விடாப்பிடியானவர். கிட்டண்ணையின் நிர்வாகத்திறன் வித்தியாசமானது.

தன்கீழ் பணியாற்றும், எல்லோரையும் தன் வசப்படுத்தும், தான்நினைத்ததைச் செய்ய வைக்கும், திறன் அவரதுதனித்துவமான வெற்றிகளுக்கு காரணமாகஅமைந்தது.

ஒவ்வொரு வேலைகளையும் தானே திட்டமிட்டு நேரில்நின்று சரிபார்த்து அவற்றைஒழுங்கமைப்பார். குட்டிசிறியின்

'மோட்டார்செல்' லுக்கு 'கரி மருந்து' அளவு பார்ப்பதிலிருந்து, நண்டுக்கறிக்கு உள்ளி தட்டிப் போடுவதுவரை, எதுவாயிருந்தாலும் தானே நின்று, சரிபார்த்து ஆரம்பித்து வைத்தால்த்தான் அவருக்குத் திருப்தி. கிட்டண்ணையின் இராணுவ நிர்வாகத்திறன் உலகறிந்த விடயமாகும். தானே சண்டைக்களங்களில் முன்நின்று வழிநடத்துவது அவரது தனிப்பண்பு. 1987 க்கு முன்னைய காலங்களில் யாழ்க் குடாநாட்டிற்குள் இராணுவ நடமாட்டத்தை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு அவர் பயன்படுத்தியது தன்வசமிருந்த குறைந்த ஆயுதங்களையும் போராளிகளையும் மட்டுமல்ல, எதிரியை முட்டாளாக்கும் தந்திரோபாயத்தையும் தனது மனவலிமையையும் சேர்த்தே பயன்படுத்தினார். நெருக்கடியான நேரங்களில் அவர்காட்டும் மனவலிமை நம்ப முடியாததாய் இருக்கும்.

அடையாளம் தெரியாதஎதிரி அந்தவீரனுக்கு குறிவைத்த ஒரு மங்கலான மாலைப்பொழுது. வழமையாக எரிந்து கொண்டிருக்கும் மின்குமிழ் எரியவில்லை. அவரது 'கார்' நிறுத்தப்பட்டு கதவைத் திறந்து இறங்க முற்படும் வேளையிலேயே, அந்தநிழலான உருவத்தின் அசைவு உள் உணர்வுகளை எச்சரிக்கிறது. நிதானிப்பதற்கிடையில் வந்து விழுந்தது 'கிரனேட்' தான் என்று அவசரமாக வெளியேறமுற்பட்ட வேளையிலேயே அது வெடித்துவிட்டது. ஆசையாய் வைத்திருந்த சின்னக் காரின் 'ஸ்ரெயறிங்'கிற்குள் சிக்குப்பட்ட காலை இழுத்து எடுப்பதற்கிடையில் வெடித்து விட்டது. இதுவரை நிகழ்ந்தவைகள் சாதாரணமானவை. எந்த ஒருவருக்கும் ஏற்படக்கூடியவைதான். ஆனால், அதன்பின்னர் அவர்நடந்து கொண்டவிதம் கிட்டண்ணைக்கேஉரிய, தனித்துவம்வாய்ந்தது. ''முழங்காலுடன் துண்டாகிப்போய் துடித்துக்கொண்டிருந்தது அவரது கால்.'' 'கிரனேட்' வந்த திசையைநோக்கி அவரது 'ரிவோல்வர்' மூன்று சூடுகளைச்சுட்டு ஓய்ந்தது. அவரது நினைவு மங்குகிறது. முழுமையாய் இருந்த 'ஜீன்ஸ்' பக்கத்தைக் கிழித்து, துண்டாகிப்போன காலுக்குத் தானே கட்டுப்போட்டுக்கொண்டிருக்கையில் நினைவு மேலும் மங்குகிறது. உள் உணர்வு அவரை எச்சரித்தது. 'கிரனேட்' எறிந்தவன் அருகில் வருவான். அவனைச் சுடவேண்டும்' என்ற உணர்வு, அவரை ''முழுமையாக மயங்கிப்போய்விடாமல்'' வைத்திருக்கிறது. 'கிரனேட்' எறிந்தவன்

## எங்கே? எங்கே? வேங்கைகள் எங்கே?
## இந்திய அரசே பதில் சொல்லு!



**கடற்புலி**
**கப்டன் நாயகன்**
[சிவலிங்கம் கேசவன்]
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.



வருவான் வருவான் எனத்திரும்பத்திரும்ப நினைத்துத்தன்னை முழுமையாக மயங்கிப் போய்விடாமல் வைத்திருந்தார். ''மூன்று சூடுகளைச் சுட்டு விட்டேன், ரிவோல்வரில் இன்னும் மூன்று ரவைகள் தான் மிச்சமாய் உள்ளது'' என்பது நினைவில் உறைக்கும் போது அவர் மயங்கிக்கொண்டிருந்தார்.

வைத்தியசாலை இவ்வளவுபக்கத்தில் இருந்தபடியால்தான் அவர் உயிர் தப்பினார் என்பதும், சத்திரசிகிச்சைஅறைக்கு எடுத்துச்செல்லப்பட்ட கணத்தில் அவரது இதயத்துடிப்பு முற்றாகவே நின்றுவிட்டிருந்தது என்பதும், அவர் உயிர் தப்பியது மருத்துவஉலகின் புதினம் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விடயங்கள்.

அவர் காயப்பட்டு இரத்தவெள்ளத்தில் மயங்கிக்கிடந்த இடத்தில் தனது 'ரிவோல்வரை' இறுகப்பற்றியபடி கிடந்தார் என்பதும், தனது 'ரிவோல்வரில்' சுட்டுவிட்ட ரவைகளுக்குப்பதிலாக புதியரவைகளை மாற்றிப் போட்டிருந்தார் என்பதும், ஆனால் நினைவுதப்பிய நிலையில் அவர் வெற்றுக் கோதுகளுக்குப் பதிலாக மீதியாய்இருந்த நல்லரவைகளை வெளியே எடுத்துவிட்டு, அந்த இடத்திற்கே புதிய ரவைகளைப் போட்டிருந்தார் என்பதும் அனேகம் பேருக்குத் தெரியாத விடயங்கள். அன்று மட்டுமல்ல தனது போராட்ட வாழ்வின் ஒவ்வொரு நாட்களிலும், சந்தர்ப்பங்களிலும் அவர் தனது மனஉறுதியை வெளிப்படுத்தினார். அதுவரை காலமும் யுத்த முனைகளிலும், தாயக பூமியின் எல்லாப் பரப்பிலும் கம்பீரமாய் உலாவிவந்த வேங்கை கால்உடைந்து கட்டிலில் வீழ்ந்தபோதும் தன்னைச் சோர்வு சூழவிடவில்லை. எந்தச்சந்தர்ப்பத்திலும் போராட்டத்திற்கான, போராளிகளுக்கான எந்தவொரு வேலையையும் பொறுப்பேற்றுச் செய்ய கிட்டண்ணை தயங்கியதில்லை. தனக்கு ஒப்படைக்கப்படும் வேலை தனது தனிப்பட்ட நிலையினை எப்படித் தீர்மானிக்கும் என்பதுபற்றி ஆராயாமல் இலட்சியத்திற்காக உழைத்தவர். தலைவர் அவர்களின் தனிப்பட்ட மெய்க்காவலராக இருந்த போதிலும்சரி, தலைவர் அவர்களுக்கு அடுத்தடுத்தபடியான தலைவனாக வளர்ந்து இருந்தபோதிலும்சரி அவர் இந்த நிலைப்பாட்டில் இருந்து மாறவே இல்லை.

1983 இன் ஆரம்ப நாட்கள், எம்மில் பன்னிருவருக்கான பயிற்சி. எல்லாமாக இருபத்தைந்துபேர்வரையில் உள்ளடங்கிய காட்டு வாழ்க்கை. 'பஸ்'ஸில் போய் கிளிநொச்சிக்கு அங்காலை எங்கையோ இறங்கி இருளும்வரை ரோட்டில் நின்று, 'ரைக்ர'ரில் ஏறி உள்ள காடெல்லாம் சுத்திச் சுழன்று, நடுக்காட்டில் ஒரு சிறிய கொட்டிலுக்குப்போய்ச் சேர்ந்தோம். வடக்கு எது, கிழக்கு எது என்றுதெரியாமல் குழம்பிக் கொண்டு நின்று, அதிகாலைமுடிந்து விடியும்போது பார்த்தால் சூரியன் மற்றப்பக்கத்தால் உதிக்கிறது. அனேகமாக உடையார்கட்டுப் பக்கமாக இருக்கவேண்டும்.

எமது பொறுப்பாளர்களில் அநேகரை தெரியும். சிலரைத் தெரியாது கிட்டண்ணையை நல்லாகவே தெரியும். கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் படிப்பவர்கள் என்றுசொல்லி, அவர்தான் எம்மில் இருவருக்கு ஒரு வீட்டில் அறை எடுத்துத்தந்திருந்தார். தினமும் பின்னேரம் வந்து 'கோஸ் ரணிங்' செய்யச் சொல்லிவிட்டு வாட்டத் தொடங்கினால் மனுசன், ''என்னத்தைச் சொல்ல, வாழ்க்கை வெறுக்கும்.'' 'வேகம், வேகம், இன்னும் இன்னும்' என்று சொல்லி 5மணிக்கு தொடங்கியது, ஏழெட்டு மணிக்கு முடியும் போது, அந்தப்பெரிய விராந்தை நிலம் வியர்வையால் நிரம்பி ஓடும். அதுவரை எதுவும் கதை இல்லை. இங்கிலீசும், தமிழுமாய் 'செய், செய்' என்பதுதான், இயலாது என்றால் ''அப்ப உனக்கு ரெயினிங் இல்லை போ'' என்னத்தைக்கதைப்பது, அதற்குப் பிறகுதான் எம்முடன் அன்பாகக் கதைப்பார்.

'ரஷ்ய' மொழிபெயர்ப்பான 'தாய்' நாவலை முழுமையாகப்படிக்கும்படி தந்திருந்தார். அது பற்றிக் கேள்விகள் கேட்பார். 'பாவலின்' நண்பர்களின் பெயர் கேட்பார். காதலியின் பெயர் கேட்பார். ஆரம்பத்தில் வாசிக்கும் போது பழக்கமின்மையால் கரடு முரடானதாகத் தெரியும் 'மொஸ்கோ' மொழி பெயர்ப்பு நூல்களை வாசிப்பதில் எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியவர் அவர்தான். இப்படி எமக்கு முன்னரே அறிமுகமாகி இருந்தவர் எமது காட்டுப் பயிற்சி முகாமில் இருக்கிறாரா என்று தேடினால் ''ஆள் வருகிறார் கையில் அகப்பையுடன்'' எல்லோரும் நல்லாய்ச் செய்ய வேண்டும் என்றும், தான்தான் இங்கு சமையல் என்றும் குட்டியாய் 'லெக்சர்' அடித்துக்கொண்டு நின்றுவிட்டுத் தலைவரைக் கண்டதும் ஓடி ஒழித்தார். பெரிய பொறுப்பாளனாய் அறிமுகமான ஒருவரை எமக்கானசமையல்காராய்ச் சந்திப்பது நம்ப முடியாத அனுபவமாயும், புதிய பாடமாயும் அமைந்தது. எமது அந்த முகாமின் சமையல் வேலை என்பது அந்தக் காலத்தில் சுலபமானதல்ல. குறுகிய காலம் பயிற்சி என்பதால் மிகவும் நெருக்கமான நேர அட்டவணை. உடற்பயிற்சி ஆசிரியர் புலேந்தி அம்மான் போட்டு வாட்டிப்போட்டு விட்டால், அடுத்த சந்தோசம் மாஸ்டரின் வகுப்பிற்கு இடையில் உள்ள குறுகியஉணவு வேளையில் சமையல் கொட்டிலுக்குப் போவது நடந்து அல்ல. போகும் வேகத்திற்கு அங்கே தடிகளால் கட்டிய சிறாம்பியில் உணவு தட்டுக்களில் போட்டு மூடி வைத்திருக்கும். கிட்டண்ணையும் ரஞ்சனும் இணைந்து சமையல் மூன்று வேளையும் நேரம் தவறாமல் உணவு கொடுக்க வேண்டும். ஒருநாள்கூட நேரம் தவறியதாகவோ, வேலையில் சினந்ததாகவோ நினைவில் இல்லை. ஆனால், தங்களது வேலைச்சுமையைக் குறைப்பதற்கான குறும்பு இருக்கும். உணவுத் தட்டுக்களில் இலக்கம் இடப்பட்டுஇருக்கும். தட்டுக்களை இலக்கம் மாறி எடுப்பவர்கள் அன்றைய சமையல்பாத்திரங்களைக் கழுவிக் கொடுக்க வேண்டும். ஆரம்பத்தில் தட்டுக்கள் இலக்க ஒழுங்கில் இருந்தன. பிரச்சனை இல்லை. இடையில் ஒரு நாள் எல்லாம் மாறி இருந்தது. யார் பார்த்தது. அன்று நாங்கள் பாத்திரம் கழுவினோம். பார்த்துச் சிரித்தார்கள். ஆனால் பின்னர் நாங்கள் உசாராகி விட்டோம். றெஜிக்கு இலக்கம் ஆறு. விக்ருக்கு இலக்கம் ஒன்பது. அவர்கள் அடிக்கடி கழுவிக் கொடுத்தார்கள். அவர்கள் சரியாக எடுத்தாலும் இவர்கள் விட்டால்தானே. இப்படிப் பம்பலும் குறும்புமாய்த் தான். ஆனால் கடமை தவறியதில்லை. சமையலில் அலட்சியம் இருந்தது இல்லை.

நீண்டகாலஓட்டத்தின்பின், ஒருநாள் தலைவர் கூறுகிறார். - ''என்ன கடமையாக இருந்தாலும் அதைப் பொறுப்பேற்றுச் செய்யப்பின் நிற்கக்கூடாது. கடமையில் உயர்ந்தது, தாழ்ந்தது என்றில்லை. ஆரம்பகாலத்தில் ஒருமுறை எமது புதிய பயிற்சி முகாம் ஒன்றில் எல்லோருக்கும் - வேலைகள் பங்கிட்டு நிர்வாகத்தைச் சீர் செய்து கொண்டு இருந்தவேளை - கிட்டு தானே முன்வந்து அனைவருக்குமான சமையல் வேலையைப் பொறுப்பெடுத்து செய்தார்.''

புதிய போராளிகளுக்கு தலைவர் எடுத்துச் சொல்லும் விடயத்தை அன்று நாங்கள் நேரே கண்டோம். அது எமக்கு போராட்டம் பற்றியும், இயக்கத்தில் நாங்கள் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறை பற்றியும் ஒரு பாடத்தை வித்தியாசமான முறையில் எடுத்துச் சொல்லியது. கிட்டண்ணை வேலைகள் பொறுப்பேற்பதிலும் அந்தஸ்தினை, தரத்தினைப் பார்ப்பது இல்லை. ஆனால் அவர் வேலையை ஒழுங்கு செய்யும் விதமும், செய்து முடிக்கும் பாங்கும் அந்த வேலைக்கு ஒரு அந்தஸ்தினை, உயர்தரத்தினை ஏற்படுத்திவிடும் என்பதே உண்மை.

கிட்டண்ணை, இறுதியாக நாட்டை விட்டுப் புறப்படும் காலத்தில் அவர் மிகவும் நொந்து போயிருந்தார். இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்ட தன்னையும் சக போராளிகளையும் விடுவிக்கும்படி சிறையில் உண்ணாவிரதம் இருந்ததும், அதனைத் தொடர்ந்து அவர் யாழ்நகரில் விடுவிக்கப்பட்டதும், அதன் பின்னர் அவர் மணலாற்றுக் காடு சென்று தலைவருடன் இணைந்து கொண்டதும் தெரிந்தவைகள் தான். தன்னுடன்இறுதிவரை துணைநின்ற போராளிகள் சிறையில் வாடுவதையும், இந்தியர்கள் தன்னைமட்டும் விடுவித்துவிட்டு தன்தோழர்களை சிறையில் வைத்து வாட்டுவதையும் சொல்லிச் சொல்லி வெதும்புவார். ''என்ரை 'கோஸ்டி' எல்லாத்தையும் என்னட்டை இருந்து பிரிச்சுப் போட்டாங்கள் மச்சான்'' என்று சொல்லும் போது அந்த, வீரனின் நெஞ்சின்ஈரம் கண்களில் வந்து நிற்கும். கிட்டண்ணை சர்வதேச தொடர்பாளராக நாட்டை விட்டுப் புறப்படுவது என்பது முடிவு செய்யப்பட்டு விட்டது. எந்த வேலையாக இருந்தாலும் பொறுப்பேற்க வேண்டும் என்ற அவரது வழமையான நடைமுறைக்கு சோதனையாக வந்தது இம்முடிவு. எங்கோ ஒரு ஐரோப்பிய நாட்டில், எம் தாயக மண்ணை விட்டு வெகு தொலைவில், தான் உயிராய் நேசித்த போராளிகளை விட்டுப் பிரிந்து, ... தன் மக்களை விட்டுப்பிரிந்து, தாய் தந்தையாய் தன்னை வளர்த்த தலைவரை விட்டுப்பிரிந்து... நினைத்து நினைத்துக் கலங்கினார்.

மணலாற்றுக்காடு. நான் அப்போது யாழ் மாவட்ட நிர்வாகத்தை பானுவிடம் ஒப்படைப்பதற்காக யாழ்ப்பாணம் புறப்பட இருந்தேன். எம்மிடையே நீண்ட பிரிவு வரப்போகிறது என்பது தெரிகிறது. சிறிய வட்டக் கொட்டிலில் வைத்து கதைக்கத் தொடங்கினார். இயக்கத்தில் ஒவ்வொருவரும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி, தலைவரின் எண்ணங்களுக்கு நாம் எப்படி செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என்பது பற்றி, ''எமதுபோராட்டத்திற்காக என்ன வேலை ஒப்படைக்கப் பட்டாலும் அதில் தீவிரமாக ஈடுபட வேண்டும். எமது கடமையை மேலும் மேலும் சிறப்பாகச் செய்வதற்கு வேண்டிய சகல முயற்சிகளிலும் இறங்க வேண்டும்.'' 'எனக்கு என்ன வேலை எண்டாலும் செய்வன். எங்களின்ரை பெடியளின் உடுப்பைத் தோய்த்து மடிக்கும் வேலை எண்டாலும், அதை எப்படி வெள்ளையாய் தோய்ப்பது என்று தான் ஆராய்ச்சி செய்வன். எனக்கு இது பிரச்சனை இல்லை.'' எனது பொறுப்பு மாற்றத்திற்காக சொன்னாரா? அல்லது தனது புதிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதில் தனது மனப் போராட்டத்திற்காக தனக்குத் தானே சொன்னாரோ தெரியாது.

அவர் சொல்லிக்கொண்டே இருக்கின்றார். தூரத்தே கேட்கும் சில் வண்டுச் சத்தத்தைவிட காடு நிசப்தமாய் இருக்கிறது. நீண்ட கனத்த மௌனத்தின் பின் 'எங்கடை சனத்தையும், இந்த மண்ணையும் விட்டுட்டுப் போகப் போறன் மச்சான், இனி எந்தக் காலமோ'' சொல்லி முடிக்காமல் குமுறிக் குமுறி அழத் தொடங்கினார். எமது தாயகத்தின் மீது, எமது மக்களின் மீது, எமது விடுதலைப் போராட்டத்தின் மீது எமது தலைவர் மீது அவர் வைத்திருந்த பாசம், பற்று அளவிட முடியாதது.

# "எங்கட கிட்டு மாமா"

தேவர் அண்ணா

"நவீனரக ஆயுதங்களைப்
பற்றி, போர் முனைகளைப்
பற்றி, போராட்டத்திலேயே
நவீன யுத்திகளைக்
கையாளுவது பற்றி -
எதிரிகளை வீழ்த்துவது பற்றி
மாத்திரம் அவர்
சிந்திக்கவில்லை.
இந்த மண்ணைப் பற்றி,
இந்த மண்ணிலே வாழ்கின்ற
மக்களைப் பற்றி,
போராட்டத்தின்
உச்சக்கட்ட வேளையில் கூட
பொதுமக்களை அதன்
தாக்கம் பாதிக்காத வகையில்
செயலாற்ற வேண்டும்
என்பது பற்றி ....."

"எங்கட கிட்டு மாமா செத்துப் போயிட்டார்"

எமது இயக்கத்தின் மூத்த தளபதி 'கேணல் கிட்டு' அவர்களது தியாக மரணச் செய்தி எமது மண்ணிலே பரவியபோது, இரண்டரை வயதுகூட நிரம்பியிராத சின்னஞ்சிறு குழந்தை ஒன்றின் செம்பவள வாயிலிருந்து உதிர்ந்த மழலைச்சொற்கள் தான் இவை.

"எங்கட வீட்டில கிட்டு மாமா செத்துப்போயிட்டார்...... அவங்கட வீட்டில கிட்டு மாமா சாகேல்லையே அம்மா...... அப்பிடியெண்டால் நாங்கள் அங்கை போய் கிட்டு மாமாவைப் பார்ப்பமே.........?" தங்கள் வீட்டில் தோரணங்கள் கட்டப்பட்டிருப்பதையும், பக்கத்து வீட்டில் அவை இல்லாதிருப்பதையும் கண்டு அந்த மழலை தன் தாயிடம் இவ்வாறு கேட்டது.

"இல்லைக் குஞ்சு, அங்கையும் கிட்டுமாமா செத்துப் போயிட்டார். அங்கையும் தோரணங்கள் கட்டுவினம்" தாயார் சின்னஞ்சிறு பிஞ்சிடம் கூறிய பதில் வார்த்தைகள் இவை.

எமது மூத்த தளபதி கிட்டு எமது தாயக மண்ணைவிட்டுப் பிரிந்த அந்தக் காலகட்டத்தில் இந்தச் சின்னஞ்சிறு மழலை அன்னையின் கர்ப்பப் பையில் கருவாகக்கூட உருவாகியிருக்கவில்லை. ஆனால் அந்தக் குட்டிப் பாப்பாவின் நெஞ்சத்தையும் கிட்டு மாமாவின் சாவு உலுப்பிவிட்டிருக்கின்றது.

சமாதானத் திட்டங்களோடு, அந்தத் திட்டங்களைப் பற்றி எமது தேசியத் தலைவரோடும், இயக்க உடன் பிறப்புக்களோடும் கலந்து பேச, தமிழீழ மக்களுக்கு நல்லதொரு விடிவைத் தேடித்தரவேண்டும் என்று ஆவலோடு, தம்பிமாரோடு தமிழீழம் நோக்கிப் பயணம் வந்துகொண்டிருந்த போது 'பாரத அரசின் பாதகச் செயலினால் வீரச்சாவைத் தேடிக்கொண்டு விட்டார்கள்' என்ற செய்தி இங்கு பரவியபோது தமிழீழமே சோகமயமானது.

பத்துமாதம் சுமந்து பெற்று, பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்துவிட்ட அன்னை, உடன் பிறப்பு, வாழ்வின் அனைத்து இன்பதுன்பங்களிலும் பங்கேற்பேன் என கிட்டு மாமாவைக் காதலித்துக் கரம்பற்றியவள், கிட்டுவோடு உண்டு உடுத்து உறவாடிய நண்பர்கள், இயக்க உடன் பிறப்புகள் அவரோடு பழகியவர்கள், பழகாதவர்கள், தெரிந்தவர்கள் - அறிந்தவர்கள் அனைவரினது நெஞ்சங்களிலும் கிட்டுமாமாவின் பிரிவுச்செய்தி பெருநெருப்பை அள்ளிக் கொட்டியது.


'கிட்டு' என்கின்ற அந்த மூன்று எழுத்துக்குரிய மகத்துவத்தை தமிழீழத்தைச் சோக மயமாக்கிய 'அந்த மூன்று' நாட்களும்; இறுதி நாளன்று தீருவில் வெளியினிலே வெள்ளமென திரண்டிருந்த இலட்சக்கணக்கான மக்கள் கூட்டமும் எடுத்து விளக்கியது.

எமது தாயக மண்ணையும், தமிழீழ மக்களையும் கிட்டுமாமா எந்த அளவிற்கு நேசித்தார் என்பதனைச் சமீகாலத்தில் அவர் எழுதிய கடிதங்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

''நாம் எமது மக்களையும், மண்ணையும் (மண் என்பதும் மக்களையே குறிக்கும்) நேசிப்பதால்தான் போராடுகின்றோம். நாம் எமது சனத்தை நேசிக்க வேண்டும். அவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும். இதுதான் எமது அடிப்படை இலட்சியம்.

சனங்களில் பல்வேறு வகைப்பட்டவர்களும் இருப்பார்கள். இவர்கள் எல்லோருக்குமாகவும்தான் நாம் போராடுகின்றோம்; இரத்தம் சிந்துகின்றோம். அனைவரையும் ஒரே மாதிரியாக நேசிக்கும் பக்குவம் வளர்க்கப்படல் வேண்டும். ஒவ்வொரு போராளிக்கும் இது ஊட்டப்படவேண்டும்.

## எங்கே? எங்கே? வேங்கைகள் எங்கே?
## இந்திய அரசே பதில் சொல்லு!



**கடற்புலி**
**லெப்டினன்ட் நல்லவன்**
[சிவஞானசுந்தரம் ரமேஸ்]
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.



எனக்கு ஒரு மண்ணும் ஒட்ட மாட்டேன் என்கிறது. எப்போதும் தமிழீழத்துக்கு ஓடிவரவேண்டும் என்ற நினைப்பும் எண்ணமுமே எழுகின்றது. ஒவ்வொரு கணமும் தாயகத்தின் சிந்தனைதான். வெளியாலே வாழும் போதுதான் நாம் எமது மண்ணை யும் மக்களையும் எவ்வளவு தூரம் நேசிக்கின்றோம் என்பது புரிகின்றது. தாய்மண்என்பதற்கான எத்தனையோ பரிமாணங்கள் புரிகின்றன. எமது தந்தையரும் தாய்மாரும் வியர்வை சிந்தி தமது மூச்சைவிட்ட பூமி அது. அங்கே வீசும் காற்றில் எம்மூத்த சந்ததியின் மூச்சுக் கலந்திருக்கின்றது. எல்லாமுமாய்ச் சேர்ந்து அந்தமண் எம்மோடு ஒட்டிக்கொள்கின்றது.

தமிழீழத்துக்கு ஓடிவரும் நாட் களை தினமும் எண்ணிக்கொண்டே இருக்கின்றேன்.''

தமிழீழ மண்ணிலே காலடி பதிக்க வேண்டும். இந்த மண்ணிலே மக்க ளோடு கலந்து நின்று அவர்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற உளத் துடிப்போடு பயணம் வந்தவேளை பாரதம் பாதகஞ் செய்துவிட்டது.

''நானும் நீயும் கலியாணம் முடித்து, பிள்ளைகள் பெற்று, பிள்ளை களை வளர்ப்பது மட்டும் வாழ்க்கை யாக முடியாது. எமது வாழ்க்கைக்கு நாமேதான் அர்த்தத்தைத் தேட வேண்டும். நான் தேடிக்கொண்டிருக் கிறேன். நீயும் தேட வேண்டும்.''

''உன்னால எவ்வளவு முடியுமோ, அதற்கு மேலாக மற்றவர்களுக்கு உதவி செய். சேவை என்பது கடமை தான். கடமையிலிருந்து தவறாதே''

''நேர்மையாகவும் உண்மையாக வும் வாழப் பழகவேண்டும். நேர்மை யாகப் பேசுதல், நேர்மையாக நடத் தல் இவ்விடயங்களில் எப்பொழுதும் கவனமாக இருக்க வேண்டும்.''

''தினமும், சிலவேளைகளில் திரும் பத் திரும்ப நல்ல விடயங்களையும் தத்துவங்களையும் படிக்கவேண்டும். வெறும் ஏட்டுச் சுரக்காய்களான தத்து வங்களை அல்லாமல் நல்ல மனிதர் களுடைய தத்துவங்களையும் படிக்க வேண்டும்.''

''தினமும் தியானம் செய்து கொண்டுதான் இருக்கிறேன். ஒரு புது ஆராய்ச்சி. ஆன்மீகத்துறையில் சமயங் களுக்கு அப்பால், சமயங்களைத் துறந்து, மக்களுக்கு ஆன்மீகவழிகாட் டலுக்கு வழிதேட வேண்டும். சமயங் களின் மாயப்பிடியில் இருந்து மக்களை விடுவித்து, சரியான மனோ சக்தியை சனங்களிடையே வளர்க்க வேண்டும்.''

இந்த வாசகங்கள் எல்லாம் அமரர் கிட்டு அவர்கள் தனது மனை விக்கு எழுதிய வாசகங்கள் மாத்திர மல்ல; எங்கள் எல்லோருக்குமாகவே சொல்லப்பட்ட வாசகங்களே அவை.

நவீனரக ஆயுதங்களைப்பற்றி, போர் முனைகளைப் பற்றி, போராட்டத்திலேயே நவீன யுக்தி களைக் கையாளுவது பற்றி-எதிரிகளை வீழ்த்துவது பற்றி மாத்திரம் அவர் சிந்திக்கவில்லை.

இந்த மண்ணைப் பற்றி, இந்த மண்ணிலே வாழ்கின்ற மக்களைப் பற்றி, போராட்டத்தின் உச்சக்கட்ட வேளையில்கூட பொதுமக்களை அதன் தாக்கம் பாதிக்காத வகையில் செய லாற்ற வேண்டும் என்பது பற்றி;

எதிரிப்படைகளின் நடவடிக்கை களினால் தமது இருப்பிடங்களைவிட்டு இடம் பெயர்ந்து அகதிகளாகி அல்லல் படுகின்ற எம் உயிரிலும் இனிய தமிழீழ மக்களைப் பற்றி;

இந்த மண்ணின் உளங்களைப் பற்றி - அந்த வளங்களை நாம்

எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி;

நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தாயக மீட்புப் போரிலே பொது மக்களின் பங்களிப்புப் பற்றி - அர்ப் பணிப்புகள் பற்றி - ஒத்துழைப்புகள் பற்றி - கிராமம் கிராமமாக நாம் சென்று மக்களோடு உறவாடி இயக் கத்தை வளர்க்கவேண்டும் என்பது பற்றி;

தமிழர்களின் கலை, பண்பாடு பற்றி - பாரம்பரிய கலை வடிவங்கள் பற்றி; ஒட்டுமொத்தமாகச் சொல்லப் போனால் அவர் சிந்திக்காத விடயங் களே இல்லை எனலாம். தனது சிந்த னைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க வேண்டும். தான் கற்றுத் தெளிந்த வைகளை - செயற்படுத்தவேண்டும் என பல்வேறு சிந்தனைகளோடு, செயற்திட்டங்களோடு தாயகம் நோக்கி பயணம் வந்தவேளை பாரத அரசு பாதகம் செய்து எம்மிடமிருந்து பிரித்துவிட்டது.

தாய், சகோதரம், மனைவி, உற்றார், உறவினர், சொந்தம் பந்தம், சொத்துப் பத்து, பட்டம் பதவிகள் அனைத்தையும் துறந்து, நீதியான ஒரு போராட்டத்துக்காக நியாயத்தின் பாற்பட்ட ஒரு போராட்டத்திற்காக, அடிப்படை மனித உரிமைகளையும் தமிழ்த்தேசிய உணர்வையும் பாதுகாப் பதற்காக கிட்டுமாமா உயிர் நீத்திருக் கின்றார்.

''சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன். என் சமா தானத்தையே உங்களுக்குத் தருகின் றேன்'' என்று கூறி தனது 33 ஆவது வயதில் சிலுவையில் மரித்தார் இறை மகன் இயேசு.

அமைதிகளை ஏற்படுத்துவதற்காக முயற்சிகளை மேற்கொண்டு - சமா தானத் திட்டங்களோடு, சமாதானத் தூதுவராக பயணம் வந்த வேளை வங்கக் கடலிலே தீயோடு சங்கமித்துக் கொண்ட தமிழீழத் தாயின் மகன் கிட்டு!

''இயேசுவின் சாவு மகிமையின் வாசலாகும்'' என்பார்கள்.

'கிட்டு' அவர்களின் வீரச்சாவு தமிழீழத்தின் வாசலாகப் போகின்றது.

□□

**எங்கே? எங்கே? வேங்கைகள் எங்கே?**
**இந்திய அரசே பதில் சொல்லு!**

**கடற்புலி**
**லெப்டினன்ட் தூயவன்**
**[மகாலிங்கம் ஜெயலிங்கம்]**
**கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**



# விடியலைக் காணும் நாள்

## கேணல் கிட்டு

ஒண்மையில் மிக இளம்பிராயத்தவர்களையும், குறிப்பாகக் குழந்தைகளையும், அவர்களின் படிப்பையும் நாம் மிகவும் கவனத்திற் கொள்ள வேண்டும். விஞ்ஞான முன்னேற்றம் அடைந்த நாடுகளில் நாட்டின் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படும் நிதியளவுக்கு, குழந்தைகள்ன் பராமரிப்புக்கு, கல்வி போன்றவற்றிற்கு ஒதுக்கப்படுகின்றன. ஆனால் இன்றும் கூட நம் நாட்டில் குழந்தைகளின் கல்வி ஒரு அமைப்பு ரீதியாக ஒழுங்கு படுத்தப்படவில்லை. குழந்தைகளைச் சரியாக வழிநடத்துவதன் மூலமே நாம் ஒரு எழுச்சிமிக்க எதிர்கால சந்ததியினரை உருவாக்கமுடியும். இன்று யாழ்ப்பாணத்தில்கூட பாலர் பாடசாலைகள் எந்த ஒரு வரைமுறைக்கும் உட்பட்டதாக இல்லை. இப்பாடசாலைகள் எல்லாமே பயிற்சிபெற்ற ஆசிரியர்களாலோ, எந்த ஒரு அமைப்பினூடாகவோ செயற்படுத்தப்படவில்லை. பதிலாக, ஆங்காங்கே எந்த வித பயிற்சியுமில்லாதவர்களினால் பாலர் பாடசாலைகள் நடத்தப்படுகின்றன.

இவை தவிர்க்கப்பட்டு பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு மிக நவீனமுறையில் பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும். இதைவிடவும் அனைத்துப் பாலர் பாடசாலைகளும் ஒரே கட்டுப்பாட்டிலும், ஒரே நெறிமுறையிலும், ஒரே அமைப்பின் கீழும் இயங்கச் செய்யவேண்டும். ஏனென்றால், குழந்தைப் பிராயத்திலேயே குழந்தைகளின் மனநிலையை உளவியல் ரீதியாக நன்றாகத்திட்டமிட்டு வளர்ப்பதுதான் எமக்குச் சிறப்பான எதிர்காலச் சந்ததியினரை அமைத்துக் கொடுக்கும். கடந்த காலங்களில் இராணுவ நெருக்கடியால் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு சொல்ல முடியாதது. தினம்தினம் குண்டுவீச்சு விமானங்களின் தாக்குதலுக்கும், இராணுவ முகாம்களிலிருந்து ஏவப்படும் குண்டுகளுக்கும் இவ்வாழ்க்கையே பழக்கப்பட்டுப் போன எம்மையே பாதிக்கும் போது, குழந்தைகளின் மனநிலைப் பாதிப்பைக் கூறவும் வேண்டுமா? நான் ஒருமுறை எனக்குப் பழக்கமான டாக்டரிடம் உரையாடிக்கொண்டிருக்கையில், தன்னிடம் ஒரு முதியவர் வைத்தியத்திற்காக வந்ததாகவும், அவருடைய நோய் விசித்திரமானதாகவும் தீர்க்கமுடியாததாகவும் இருந்ததாகக் கூறினார். அதாவது அந்த வயோதிபர் தானிருக்கும் இடத்திற்கு மேலாக இராணுவக் ஹெலிகொப்டர் விமானம் பறக்கும் பொழுது தன்னையும் அறி

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



யாமல் சிறுநீர் கழித்துவிடுவதாகக் கூறினார். இப்படித்தான் எமது சமுதாயம் உளவியல் ரீதியாகக்கூட மிகவும் பாதிப்படைந்து வருகிறது. உலக அனுபவம் வாய்ந்த முதியவரே இப்படி நிலைக்கு ஆளாகி இருக்கும் பொழுது, குழந்தைகளின் மனநிலைப் பாதிப்பு எவ்வளவு அதிகமாக இருக்கும்? நான் கூறுவது அனைத்தும் உளவியல் ரீதியான பாதிப்புகளைத் தான். நேரடியான தாக்கம் ஊரறிந்த விடயம்.

ஆகாயத்தில் குண்டுவீச்சு விமானங்கள் தோன்றும் பொழுது, அதை முதலில் கண்டவரிடமிருந்து எழும்பும் 'பொம்பர்' என்ற எச்சரிக்கைக் குரல் சனங்களின் காதுகளில் புகுந்தவுடன் அவர்களின் முகங்களில் தெரியும் பயப்பீதி, மரணபயம், பதட்டம், அவதி இவற்றையெல்லாம் பார்த்து தம்மையும் அறியாமல் அலறும் குழந்தைகளின் ஓலக்குரல் செவியை அடைத்து விடும். இப்படியாக உளவியல் ரீதியாக பாதிப்புடைந்த குழந்தைகளுக்கு சிறிதளவேனும் நிவர்த்தி கொடுக்க வேண்டும் என்பதற்காக பல பகுதிகளில் சிறுவர் பூங்காக்களை நிறுவி வருகின்றோம். அதைவிட யாழ்ப்பாணத்தில் நல்லூர்க்கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் கந்தர்மடம் என்னும் இடத்தில் சரணாலயம் ஒன்று நிறுவியுள்ளோம். சரணாலயம் என்ற பெயர் இருந்தாலும் உண்மையில் அது ஒரு சிறிய மிருகக்காட்சிச் சாலை போன்றே உள்ளது. இப்படியான முயற்சிகளினால் சிறுவர்களினதும், குழந்தைகளினதும் மனநிலையை திடமாக்க முயல்வோம். எந்தவிதமான பொழுது போக்கு வசதிகளும் இல்லாமல் மிகப் பெரிய இராணுவ அழுத்தத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் குழந்தைகளை உளவியல் ரீதியாக பாதிப்படையாமல் வழிநடத்தவேண்டும்.

('குழந்தைகள் வளர்ப்பு' பற்றி
'கேணல் கிட்டு' அவர்கள் 1989ம் ஆண்டு தமிழக
'தேவி' இதழில் எழுதியதிலிருந்து......)

## "எங்கே? எங்கே? வேங்கைகள் எங்கே? இந்திய அரசே பதில் சொல்லு!"

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



**கடற்புலி**
**லெப்டினன்ட் அமுதன்**
**[அலோசியஸ் ஜான்சன்]**
**நாவாந்துறை வடக்கு,**
**யாழ்ப்பாணம்.**



# எங்கே எங்கள் வீரர்கள்? இந்திய அரசே! பதில் சொல்லு!

*தளபதி 'கிட்டு' தலைவனின் 'குட்டிச்சிறி' எனும்*
*தம்பியும் எங்கே?*
*'மலரவன்' 'ஜீவா' 'நாயகன்' 'றொசான்'*
*என்றிடும் வேங்கைகள் எங்கே?*
*புலி 'குணசீலன்' 'தூயவன்' 'அமுதன்'*
*'நல்லவன்' என்பவர் எங்கே?*
*போர் முகத்தேறிப் புலியென ஆடிப்*
*பொங்கிய வீரர்கள் எங்கே?*

*எங்கே? எங்கே? வேங்கைகள் எங்கே?*
*இந்திய அரசே! பதில் சொல்லு - அவர்*
*சந்தன மேனி செந்தணலான*
*சங்கதி தெரியும் பதில் சொல்லு!*

*கடலில் வெடித்த கப்பலில் இருந்து*
*கரும்புலி ஆயிரம் பாயும் - உனைத்*
*தடவும் தென்றல் காற்றும் இனிமேல்*
*தணலாய்த் தானே வீசும்.*


"வெளிச்சம்"
கலை, இலக்கிய சமூக இதழ்

உருவாக்கம்:-
''ஆசிரியர் குழு''

இதழ் அமைப்பு:-
இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

ஓவியம்:-
''தயா''

''புளக்குகள்''
அழகன்
புளக் தயாரிப்பாளர்கள்

வெளியீடு:-
விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்.

அச்சு:-
ம. மரியதாஸ்

அழகு நகைகளின் பிறப்பிடம்

# இரத்தின மஹால்

தரமான நகைகள்
அழகான டிசைன்களில்
உருவாகும் இடம்
"இரத்தின மஹால்"

விரும்பிய விதங்களில் + குறித்த தவணையில்
22 கரட் நகைகளை + திருப்தியாகச் செய்து கொள்ள
நீங்கள் வரவேண்டிய இடம்

# இரத்தின மஹால்

(அழகு நகைகளின் பிறப்பிடம்)
யாழ் வீதி, கிளிநொச்சி.

"என்ன அவசரம் ஓடிப்போறியள் அண்ணை"
"ஒருக்கா கதிர்முகனிட்டப் போகத்தான்"

கிளிநொச்சிப் பகுதியில்
பலசரக்குப் பொருட்களின்
மொத்த, சில்லறை வியாபாரிகள்

# கதிர்முகன் களஞ்சியம்

*அன்றாடப் பாவனைக்குரிய
எல்லாவிதமான பலசரக்குப்
பொருட்களையும், குறைந்த
விலையில், எப்பொழுதும்
பெற்றுக் கொள்வதற்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்*

# கதிர்முகன் களஞ்சியம்

(கரடிப்போக்குச் சந்தி அருகாமை)
யாழ் வீதி, *கிளிநொச்சி.*

யுத்தத்தின் இந்த நாட்களில்
தேவையான பொருட்களைப் பெறுவதில் சிரமம்தான் எனினும்,
நாங்கள் கூடியவரையிலும், மக்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குவதில் பெருமையடைகின்றோம்.

# கமலா ரேடர்ஸ்

மக்களின் மனதில் நீங்காத இடம்பிடித்த நிறுவனம்

பலசரக்குப் பொருட்கள்
எதுவானாலும் எங்களிடம் வாங்குங்கள்.

# கமலா ரேடர்ஸ்

(நீதிமன்றம் முன்பாக)
யாழ் வீதி, கிளிநொச்சி.

சிவதரன்

மங்கள நாட்களுக்குத் தேவையான புடவைகள்
மற்றும் துணிவகைகளை புதிது புதிதாக வழங்குவதில்
சிவதரன் புடவையகம்
முன்னணி வகிக்கிறது.

காஞ்சிபுரம் புடவைகள், கூறை வகைகள்
சேட்டிங், சூட்டிங், சிறுவர் உடைகள்
மற்றும் துணி வகைகளை
புதிய டிசைன்களில் பெற்றுக் கொள்ளுவதற்கு

# சிவதரன் புடவை அகம்

யாழ் வீதி, கிளிநொச்சி.

சகலவிதமான பலசரக்குப் பொருட்களின்
மொத்த, சில்லறை வியாபாரிகள்

மோகனா றேடர்ஸ்

வீட்டுப் பாவனைப் பொருட்கள்
உணவுப் பொருட்கள்,
எண்ணெய் வகைகள் என

எல்லாவகைப் பலசரக்குப் பொருட்களையும்
பெற்றுக் கொள்வதற்கு கிளிநொச்சியில்

# மோகனா றேடர்ஸ்

யாழ் வீதி, கிளிநொச்சி.

# பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

வழங்கும் உதவி

## ஒரே இடத்தில் பல தேவைகளை நிறைவேற்றும் வசதி

- ☐ புடவை வகைகள்
- ☐ எவர்சில்வர் பாத்திரங்கள்
- ☐ விளையாட்டுப் பொருட்கள்
- ☐ சாய்ப்புச் சாமான்கள்
- ☐ பலசரக்குப் பொருட்கள்
- ☐ பிளாஸ்ரிக் பொருட்கள்
- ☐ அழகு சாதனங்கள்
- ☐ சைக்கிள் உதிரிப்பாகங்கள்

☐ மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் ☐

*மற்றும்*

● அரிசி ஆலையும், அரைக்கும் ஆலையும் ●

● உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் கொள்வனவும், விற்பனவும் ●

*என நீடித்த சேவை செய்கின்றது*

# பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

யோகபுரம், மல்லாவி.

நெல் குத்திக் கொள்வதற்கும்
அரிசி வாங்குவதற்கும்
எப்பொழுதும் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

அரிசி தரம் I
அரிசி தரம் II
அரிசி தரம் III

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

குத்தரிசி + பச்சை அரிசி + திட்டுப்பச்சை அரிசி
வகைகளில்

**தரமான அரிசியின் மொத்த உற்பத்தியாளர்**

# மயூரன் மில்

**யாழ் வீதி, கிளிநொச்சி.**

---

உங்களுக்குத் தேவையான பலசரக்குப் பொருட்களைப்
பெற்றுக் கொள்ள நல்லதோர் இடம்.

*பலசரக்குப் பொருட்கள்*
*மொத்த சில்லறை விற்பனையாளர்*

# கணேசா ஸ்ரோர்ஸ்

*கிளிநொச்சி.*